# தமிழ் சொல்
## TAMIL SOUL

Volume : 1 | Issue : 4 | July 2024 | Chennai | Pages : 8 | Price : 8.00 | (Tamil Monthly)

மலர் : 1 | இதழ் : 4 | ஜூலை 2024 | சென்னை | பக்கம் : 8 | விலை : ரூ.8.00 | (தமிழ் மாத இதழ்)


# சாதிவாரியான கணக்கெடுப்பை ஒன்றிய அரசு நடத்திட வேண்டும்!

## சட்டசபையில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தனித்தீர்மானம்!



சாதிவாரியான மக்கள் தொகை கணக்கெடுப்பு நடத்திட ஒன்றிய அரசை வலியுறுத்திக் கொண்டுவரப்பட்ட அரசினர் தனித் தீர்மானத்தை முன்மொழிந்தார் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின். அப்போது முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் ஆற்றிய உரை பின்வருமாறு:

பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்” என்ற உயர்ந்த கோட்பாட்டின் வழியில் ‘எல்லோருக்கும் எல்லாம்’ என்ற சமுதாய சிந்தனையை அடித்தளமாகக் கொண்டு, தனது சமூகநீதிப் பயணத்தை இந்த அரசு முன்னெடுத்து வருகிறது.

சமுதாயத்தின் அனைத்துத் தரப்பு மக்களும் கல்வி மற்றும் வேலைவாய்ப்புகளை பெறுவதில் சம வாய்ப்புகளையும், சம உரிமைகளையும் கொண்டவர்களாக மாற்றுவதன் மூலம்தான் உண்மையான, பரவலான பொருளாதார வளர்ச்சி அடைந்த சமுதாயமாக நாம் மாற இயலும். அந்த நோக்கத்துடன்தான் கல்வி, சமூகம் மற்றும் பொருளாதாரம் ஆகிய தளங்களிலும் அனைத்துத்தரப்பு மக்களிடையேயும் ஒரு சமநிலையைக் கொண்டு வருவதற்காக இடஒதுக்கீட்டு கொள்கை நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

இதனால் தாழ்த்தப்பட்டோர், பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், சிறுபான்மையினர் மற்றும் மாற்றுத்திறனாளிகள் என சமுதாயத்தின் அனைத்துத் தரப்பு மக்களும் ஒருங்கே வளர்ச்சியடைய வழிவகை செய்து, அதனைக் கடைபிடித்து வருகிறோம். சமீபகாலமாக, சாதிவாரிக் கணக்கெடுப்பு மேற்கொள்ளப்பட வேண்டும் என்ற கோரிக்கை பரவலாகப் பேசப்பட்டு வருகின்றது. இந்தப் பேரவையிலே பாட்டாளி மக்கள் கட்சியின் மரியாதைக்குரிய உறுப்பினர் கோ.க.மணி பேசும்போதுகூட, சாதிவாரிக் கணக்கெடுப்பை மாநில அரசு மேற்கொள்ள வேண்டும் என்ற ஒரு கருத்தினைத் தெரிவித்திருந்தார்.

சாதிவாரிக் கணக்கெடுப்பு மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதுதான் திராவிட முன்னேற்றக் கழகத்தின் கருத்தும் என்பதை முதலில் இங்கு தெரிவித்துக் கொள்கிறேன். மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த இப்பொருள் குறித்து இந்தப் பேரவைக்கு முழுமையான விவரங்களை எடுத்துரைப்பது சரியானதாக இருக்கும் என்று நான் கருதுகிறேன்.

தேசிய மக்கள் தொகைக் கணக்கெடுப்பு என்பது அதாவது, ஒன்றிய அரசால் மக்கள் தொகைக் கணக்கெடுப்புச் சட்டம், அதாவது, Census Act 1948—ன்கீழ் மேற்கொள்ளப்படும் ஒரு மாபெரும் பணி. இது ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்திலிருந்து 100 ஆண்டுகளுக்கும் மேலாக தொடர்ந்து 10 ஆண்டுகளுக்கு ஒருமுறை ஒன்றிய அரசால் நடத்தப்பட்டுவரும் ஒரு மாபெரும் பணி. மக்கள்தொகை தொடர்பான புள்ளிவிவரங்கள் அனைத்தும் இக்கணக்கெடுப்பின் மூலம் சேகரிக்கப்பட்டு ஒன்றிய அரசால் தொகுத்து வெளியிடப்படுகிறது. மக்கள் தொகைக் கணக்கெடுப்புச் சட்டத்தின் பிரிவு 3—ன்படி ஒன்றிய அரசுதான் மக்கள் தொகைக் கணக்கெடுப்பை நடத்த வேண்டும். ஆனால், பொதுவெளியில் பரவலாகத் தெரிவிக்கப்படும் ஒரு கருத்து என்னவென்றால், புள்ளிவிவரச் சட்டம் 2008, அதாவது, Collection of Statistics Act, 2008—இன் அடிப்படையில் சாதிவாரிக் கணக்கெடுப்பை மாநில அரசு மேற்கொள்ளலாம் என்பதாகும்.

இந்தச் சட்டத்தின்படி மாநில அரசுகள் சமூகப் பொருளாதார புள்ளிவிவரங்களைச் சேகரிக்க வழிவகை செய்யப்பட்டுள்ளதே தவிர, இதே சட்டத்தின் பிரிவு 3, உட்பிரிவு (அ)—ன்படி இந்திய அரசமைப்புச் சட்டத்தின் 7—வது அட்டவணையிலுள்ள இனங்கள் தொடர்பாக புள்ளிவிவரங்கள் சேகரிக்க இயலாது. அந்த 7—வது அட்டவணையில்தான் மக்கள்தொகை கணக்கெடுப்பு 69—வது இனமாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. அதுமட்டுமல்ல, இச்சட்டத்தின் பிரிவு 32—ன்படி மக்கள் தொகை கணக்கெடுப்புச் சட்டம் 1948—இன்கீழ் கணக்கெடுக்கப்படும் மக்கள் தொகை தொடர்பான புள்ளிவிவரங்களை (Census data) சேகரிக்க இயலாது என்று மிகவும் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும், இப்பொருள் தொடர்பான வழக்கு தற்போது மாண்பமை உச்சநீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது.

இந்நிலையில், பொதுவெளியில் சிலர் தவறாகப் புரிந்து கொண்டுள்ளபடி 2008—ஆம் ஆண்டு புள்ளிவிவரங்கள் சேகரிக்கும் சட்டத்தின்கீழ் சாதிவாரி மக்கள்தொகை கணக்கெடுப்பு மேற்கொள்ள இயலாது. சட்டப்படியாக நிலைக்கக்கூடிய கணக்கெடுப்பு என்றால், அது ஒன்றிய சட்டமான மக்கள் தொகை கணக்கெடுப்புச் சட்டத்தின் கீழ்தான் மேற்கொள்ளப்பட வேண்டும். எனவேதான், இப்பணியை ஒன்றிய அரசு மேற்கொள்வதுதான் முறையாக இருக்குமென்று நாங்கள் வலியுறுத்தி வருகிறோம்.

அரசியலமைப்புச் சட்டம் பிரிவு 246—ன்படி மக்கள்தொகை கணக்கெடுப்பு ஒன்றிய அரசின் பட்டியலில் வைக்கப்பட்டுள்ளது. 10 ஆண்டுகளுக்கு ஒருமுறை மேற்கொள்ள வேண்டிய அடிப்படையான பணியான மக்கள்தொகை கணக்கெடுப்பினை 2021—ஆம் ஆண்டு மேற்கொள்ளாமல் ஒன்றிய அரசு இன்றுவரை காலம் தாழ்த்தி வருவது எதனால்? முதல் ஆண்டு கோவிட் பெருந்தொற்றைக் காரணமாக சொன்னார்கள். தற்போது கோவிட் சென்று 3 ஆண்டுகளுக்கு மேலான பின்பும் அப்பணியை மேற்கொள்ளாமல் இருப்பது ஒன்றிய அரசு தன் கடமையைப் புறக்கணிக்கும் செயல் அல்லவா?

நாம் தொடர்ந்து கோரிக்கை வைப்பது மக்கள்தொகைக் கணக்கெடுப்பை மட்டுமல்ல, அத்துடன் சேர்த்து சாதிவாரிக் கணக்கெடுப்பையும் உடனடியாகத் தொடங்க வேண்டுமென்று வலியுறுத்தி கடந்த 20.10.2023 அன்று மாண்புமிகு இந்திய பிரதமர் அவர்களுக்கு நான் கடிதம் எழுதியுள்ளேன். அவ்வாறு ஒன்றிய அரசு களப்பணியை மேற்கொள்ளும்போது கிடைக்கப்பெறும் புள்ளிவிவரங்களின் அடிப்படையில் மாநில அரசு எடுக்கும் முடிவுகளுக்கும், இயற்றும் சட்டங்களுக்கும் தான் சட்டரீதியான பாதுகாப்பு எப்போதும் இருக்கும்.

மாறாக, அந்தந்த மாநில அரசுகள் ஒரு சர்வே (Survey) என்ற பெயரில் புள்ளிவிவரங்களைச் சேகரிப்பது, பின்னர் அதன் அடிப்படையில் சட்டங்களை இயற்றுவது என்றால் அது பின்னொரு நாளில் நீதிமன்றங்களால் ரத்து செய்யப்படும் வாய்ப்புள்ளது.

எனவேதான், இந்தக் காரணங்களின் அடிப்படையில், ஏற்கெனவே தாமதப்படுத்தப்பட்டுள்ள தேசிய மக்கள்தொகைக் கணக்கெடுப்பை ஒன்றிய அரசு உடனடியாகத் தொடங்க வேண்டுமென்றும், அத்துடன் சாதிவாரியான மக்கள்தொகைக் கணக்கெடுப்பையும் சேர்த்தே நடத்தவேண்டும் என்றும் இந்தப் பேரவை வாயிலாக பின்வரும் தீர்மானத்தை நான் முன்மொழிய விரும்புகிறேன்.

**தீர்மானம்**

“இந்திய மக்கள் அனைவருக்கும் கல்வி, பொருளாதாரம், வேலைவாய்ப்பு ஆகிய அனைத்திலும் சம உரிமையும், சம வாய்ப்பும் கிடைப்பதை உறுதிசெய்யும் வகையில் திட்டங்களைத் தீட்டி, சட்டங்கள் இயற்ற வழிவகை செய்ய சாதிவாரியான மக்கள்தொகை கணக்கெடுப்பு அவசியம் என்று இப்பேரவை கருதுகிறது.

எனவே 2021—ஆம் ஆண்டு மேற்கொண்டிருக்க வேண்டிய மக்கள்தொகைக் கணக்கெடுப்பை உடனே தொடங்க வேண்டுமென்றும், அத்துடன் இம்முறை சாதிவாரியான கணக்கெடுப்பையும் இணைத்தே நடத்தவேண்டும் என்றும் ஒன்றிய அரசை இப்பேரவை ஒருமனதாக வலியுறுத்துகிறது”. இந்தத் தீர்மானத்தை உறுப்பினர்கள் அனைவரும் ஒருமனதாக நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டு அமைகிறேன்” எனத் தெரிவித்துள்ளார்.






தமிழ்நாடு ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் சார்பில் வாழ்ந்து காட்டுவோம் திட்டத்தின் கீழ் பெண்களுக்கான ‘ஸ்டார்ட்—அப்’களை மேம்படுத்துவதற்கும், ஊக்கப்படுத்துவதற்கும், “தமிழ்நாடு ஊரக தொழில் காப்பு மற்றும் புத்தொழில் உருவாக்கு நிறுவனம்” ஒன்றையும், அதற்கான (TN-RISE) இலட்சினையை வெளியிட்டு இணையதளத்தையும், திட்டத்திற்கான அலுவலகத்தையும் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் தொடங்கி வைத்தார்.

# தமிழ்நாடு கண்டடைந்த கிங் மேக்கர் காமராஜர்!





மிக சாதாரண குடும்பத்தில் பிறந்து, மாநிலத்தின் முதல்வராகி, பல அதிகாரப் பதவிகள் தேடி வந்தபோதும், அந்த அரியணைகளை ஏற்காமல் பிறரை அவற்றில் அமர வைக்கும் அதிகாரம் மிக்கவராக அந்த காலத்தில் வலம் வந்தவர் ஒருவர் வாழ்ந்தார் என்றால் அதற்கு முதல் உதாரணமாக தமிழ்நாட்டைச் சேர்ந்த காமராஜரை குறிப்பிடலாம்.

இவரது படிப்பு வெறும் ஆறாம் வகுப்பு மட்டுமே. 16ஆம் வயதில் காங்கிரஸ் கட்சியின் கடைக்கோடி தொண்டனாக அரசியல் பாதையை தேர்வு செய்த காமராஜ், 36 வயதை நிறைவு செய்யும் முன்பே காங்கிரஸ் கமிட்டியின் மாநில தலைவரானவர்.

ஒன்பது வருட சிறை வாழ்க்கை, ஒன்பது வருட முதல்வர் என மாறுபட்ட அரசியல் அனுபவங்களை வாழ்வில் கண்ட அவர், தனது வாழ்காலத்திலேயே காங்கிரஸ் கட்சியில் காமராஜ் அணி, ராஜாஜி அணி என இரு அணிகள் இயங்கும் அளவுக்கு தனக்கென தீவிர ஆதரவாளர்களைக் கொண்ட தலைவராக விளங்கினார்.

மெட்ராஸ் மாகாணத்தின் மூன்றாவது முதல்வராக 1954ஆம் ஆண்டு முதல் 1963ஆம் ஆண்டுவரை என ஒன்பது ஆண்டுகளுக்கு பதவி வகித்த காமராஜ் அரசியலில் விட்டுச் சென்ற நினைவலைகள் இன்றைய அரசியல் உலகில் பல தலைவர்களுக்கும் படிப்பினையாக கருதப்படுகிறது. காமராஜ் முதல்வர் பதவியில் இருந்தபோது அவர் நிறைவேற்றிய திட்டங்கள், எளிமையான அவரது வாழ்க்கை பல தளங்களில் பதிவாகியிருக்கின்றன. அவற்றில் அதிகம் காணப்படாத சில அரிய தகவல்களை இந்த கட்டுரையில் வழங்க முற்பட்டிருக்கிறோம்.

அந்தக்கால மெட்ராஸ் மாகாணத்தின் மதுரைக்கு தெற்கே 48 கிலோ மீட்டர் தூரத்தில் உள்ள விருதுபட்டியில் 1903ஆம் ஆண்டு ஜூலை 15ஆம் தேதி, ஒரு நாடார் சமூக குடும்பத்தில் குமாரசுவாமிக்கும் சிவகாமியம்மாளுக்கும் மகனாக பிறந்தார் காமராஜ். அப்போதைய ராமநாதபுரம் மாவட்டத்துக்கு உட்பட்ட பகுதியாக இருந்தது இந்த விருதுப்பட்டி.

பிறந்தவுடன் காமாட்சி என்ற பெயருடன் அழைக்கப்பட்ட காமராஜின் பெயர் பின்னர் காமராஜ் என மாற்றப்பட்டது. குமாரசுவாமி, சிவகாமியம்மாள் தம்பதிக்கு காமராஜுக்கு பிறகு பிறந்த பெண் குழந்தையின் பெயர் நாகம்மாள்.

### பிரம்படியால் கல்வியில் குறைந்த ஆர்வம்

காமராஜின் பள்ளிப்பருவம் வரவேற்புக்குரியதாக இருக்கவில்லை. தனது ஐந்து வயதில் அவர் படித்த ஆரம்பப்பள்ளி வாத்தியாரிடம் பிரம்படி வாங்கிய அனுபவங்கள் கடுமையானதாக இருந்தது. இதனால், அந்த பள்ளியில் இருந்து முருகய்யா என்பவர் நடத்தி வந்த இடைநிலைப் பள்ளியில் காமராஜை அவரது பெற்றோர் சேர்த்தனர்.

அங்குதான் தமிழ் மொழியில் எழுதவும் தெளிவாக பேசவும் காமராஜுக்கு வாய்ப்பு அமைந்தது. அந்த காலத்தில் விருதுப்பட்டியில் இருந்த ஒரே உயர் பள்ளி க்ஷத்ரிய வித்யாலயா. நாடார் சமூகத்துக்கு பிள்ளைகளுக்கு இலவச கல்வி, பிடி அரசி வழங்கும் வழக்கத்தை அந்த பள்ளி நிர்வாகம் கொண்டிருந்தது. அந்த பள்ளியில் 1910—11 கல்வியாண்டில் சேர்ந்தார் காமராஜ்.

வ.உ. சிதம்பரனார், சுப்ரமணிய சிவா, சுப்ரமணிய பாரதி போன்ற சுதந்திர போராட்ட வீரர்களின் வந்தே மாதரம் முழக்கத்தால் கவரப்பட்ட காமராஜ், 1915ஆம் ஆண்டு ஏப்ரல் 1ஆம் தேதி, தென்னாப்பிரிக்காவில் இருந்து காந்தி இந்தியாவுக்கு திரும்பியபோது காமராஜின் சுதந்திரப்பற்றும் பிரிட்டிஷ் அரசுக்கு எதிரான போராட்ட உணர்வும் தீவிரமாகியது.

### அரசியல் பிரவேசத்தை தூண்டிய சம்பவம்

1919ஆம் ஆண்டு ஏப்ரல் 13ஆம் தேதி பஞ்சாப் மாநிலத்தின் அமிர்தசரஸில் ரௌலட் சட்டத்துக்கு எதிராக திரண்ட மக்கள் சுட்டுக் கொல்லப்பட்டு படுகொலை செய்யப்பட்ட சம்பவம் தேசம் முழுவதும் அதிர்வலைகளை ஏற்படுத்தின. அந்த சம்பவம், தனது தீவிர அரசியல் பிரவேசம் குறித்து காமராஜை சிந்திக்கத் தூண்டியது.

அந்த சம்பவம், தேசத்தின் மூலை முடுக்கெல்லாம் பிரிட்டிஷ் ஆட்சியாளர்களுக்கு எதிரான போராட்டங்களை தீவிரமாக்க, காந்தி வகுத்த அகிம்சை போராட்ட உத்தியால் இந்திய இளைஞர்கள் ஈர்க்கப்பட்டார்கள். அதில் ஒருவராக இருந்த காமராஜ், 1919ஆம் ஆண்டு காங்கிரஸ் இயக்கத்தில் தன்னை அர்ப்பணித்துக் கொண்டார். காந்தியின் ஒத்துழமையாமை இயக்கத்தில் பங்கெடுத்தபோது, காமராஜுக்கு வயது, வெறும் 18 மட்டுமே.

இந்த காலகட்டத்தில்தான் காமராஜின் தீவிர அரசியல் கவனத்தை திசை திருப்ப அவரை தனது மகள் வழி மூத்த பேத்தி மங்கலத்துக்கு திருமணம் செய்து வைக்க சிவகாமியம்மாள் முடிவெடுத்தார். ஆனால், வாழ்நாள் முழுவதும் திருமணம் செய்து கொள்ளாதவராகவே தனது ஆயுளை நிறைவு செய்தார் காமராஜ்.

### காந்தியுடன் முதல் சந்திப்பு

காங்கிரஸ் கட்சியில் காமராஜ் சேர்ந்த இரண்டு ஆண்டுகளில் சுதந்திர இந்தியா இயக்கத்தை முன்னெடுக்கும் நோக்குடன் மதுரை வந்த காந்தியை அவர் சந்தித்தார்.

### காங்கிரஸ் கட்சியில் ஆரம்பப்பொறுப்பு

அது 1922ஆம் ஆண்டு. சாத்தூர் தாலுகாவில் ஈ.வெ.ராமசாமி தலைமையில் நடந்த கட்சிக்கூட்டத்தில் மெட்ராஸ் பிரசிடென்ஸி காங்கிரஸ் கட்சியின் உறுப்பினராக காமராஜ் தேர்வானார். அந்த மாநாட்டின் துவக்க விழா செயலாளராகவும் காமராஜ் இருந்தார். அடுத்த ஆண்டு கள்ளுக்கடை முற்றுகை போராட்டத்தில் காமராஜ் கலந்து கொண்டார்.

1927ஆம் ஆண்டு சென்னை எழும்பூரில் இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் 43ஆவது வருடாந்திர மாநாடு நடந்தது. அங்குதான் முதல் முறையாக ஜவாஹர்லால் நேரு, சத்தியமூர்த்தி ஆகியோரை சந்தித்தார் காமராஜ். முதல் சந்திப்பிலேயே நேருவை தனது சொந்த ஊரான விருதுநகரில் ஒரு கட்சி மாநாட்டில் பங்கேற்க சம்மதிக்க வைத்தார் காமராஜ்.

1929ஆம் ஆண்டில் சென்னை உயர் நீதிமன்ற வளாகத்தில் சைமன் ஆணையத்துக்கு எதிராக ஆயிரக்கணக்கான காங்கிரஸ் தொண்டர்களை திரட்டிப் போராடியது, காமராஜின் ஆளுமை திறனை நேரு அங்கீகரிக்க காரணமாக இருந்தது.

### உப்பு சத்தியாகிரகமும் முதல் சிறைவாசமும்

1930ஆம் ஆண்டில் காந்தி, பிரிட்டிஷ் அரசு நிர்வாகம் கொண்டு வந்த உப்பு சட்டத்தை எதிர்த்து உப்புச்சத்தியாகிரகத்தை தொடங்கினார். தமிழ்நாட்டில் அந்த போராட்டத்தை வழி நடத்திய ராஜாஜியுடன், திருச்சி முதல் வேதாரண்யம் வரை தொண்டர்கள் சென்றனர். அந்த போராட்டத்தில் தமது ஆதரவாளர்களுடன் பங்கெடுத்த காமராஜ் கைதானார். 1930ஆம் ஆண்டு ஜூன் 9ஆம் தேதி கைதான காமராஜுக்கு இரண்டு ஆண்டுகள் சிறை தண்டனை விதிக்கப்பட்டது. அவர் அலிபுரம் சிறையில் அடைக்கப்பட்டார். எனினும், 1931ஆம் ஆண்டில் நடந்த காந்தி—இர்வின் ஒப்பந்தத்தின்படி அவர் 1931 ஆம் ஆண்டு மார்ச் 12ஆம் தேதி விடுவிக்கப்பட்டார். இதுவே, காமராஜ் தனது அரசியல் பொதுவாழ்வில் எதிர்கொண்ட முதலாவது சிறைவாசம்.

### கட்சியில் தொடங்கிய செல்வாக்கு

அது 1931ஆம் ஆண்டு. சத்தியமூர்த்தி தலைமையில் காங்கிரஸ் கட்சியின் மாகாண கூட்டம் நடந்தபோது, ராமநாதபுரத்தின் சார்பில் கட்சியின் காரிய கமிட்டி உறுப்பினராக காமராஜ் தேர்வானார். இதுவே காங்கிரஸ் கட்சியில் காமராஜுக்கு கிடைக்க முக்கியமான முதலாவது அரசியல் பதவியானது.

இந்த காலகட்டத்தில் காந்தி—இர்வின் ஒப்பந்தம் வெற்றிகரமாக அமையாததால் லண்டனில் நடந்த இரண்டாவது வட்ட மேஜை மாநாட்டில் அதிருப்தியுடன் காந்தி வெளியேறினார். அப்போது தடை உத்தரவுக்கு எதிராக காமராஜ் செயல்படாதபோதும், முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக அவரை பிரிட்டிஷ் அரசு கைது செய்து வேலூர் சிறையில் அடைத்தது. பிறகு அவர் 1933ஆம் ஆண்டு ஜனவரி 9ஆம் தேதி விடுதலையானார். இது காமராஜின் இரண்டாவது சிறைவாசமானது.

1933ஆம் ஆண்டில் கவர்னர் சர் ஜான் ஆண்டர்சனை கொலை செய்ய சதித்திட்டம் தீட்டியதாகவும் அவரை கொல்ல துப்பாக்கிக்கு ஏற்பாடு செய்ததாகவும் காமராஜ் மீது குற்றம் சாட்டப்பட்டது. ஆனால், அந்த சம்பவத்தில் அப்ரூவர் ஆனவரின் வாக்குமூலத்தின் அடிப்படையில் அந்த நேரத்தில் காமராஜ் சம்பந்தப்பட்ட காவல் நிலையத்தில் இருந்தார் என்பதை நிரூபிக்க ஆதாரமில்லாததால் அந்த வழக்கில் இருந்து அவர் விடுவிக்கப்பட்டார்.

இதேபோல, விருதுநகர் காவல் நிலையத்தை வெடிவைத்து தகர்க்க தனது நண்பர்கள் முத்துசாமி, மாரியப்பாவுடன் சேர்ந்து முயன்றதாக காமராஜ் மீது மற்றொரு வழக்கை காவல்துறையினர் தொடர்ந்தனர். அந்த வழக்கும் அடிப்படையற்றது என காமராஜின் வழக்கறிஞர் ஜார்ஜ் ஜோசஃப் நிரூபித்தார்.

### தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியில் பொதுச்செயலாளர்

1936ஆம் ஆண்டில் சத்யமூர்த்திக்கும் சி.என். முத்துரங்க முதலியாருக்கும் இடையே கட்சித் தலைவர் பதவிக்கு கடும் போட்டி நிலவிய வேளையில், ராஜாஜி ஆதரவு பெற்ற சத்தியமூர்த்திக்கு வெற்றி கிட்டியது. அப்போது கட்சியின் பொதுச்செயலாளராக காமராஜை நியமித்தார் சத்தியமூர்த்தி. அந்த பதவியைத் தொடர்ந்து 1936இல் மாநிலத்தில் நேரு சுற்றுப்பயணம் செய்த போது அவருடன் நெருங்கிப்பழகும் வாய்ப்பு காமராஜுக்கு கிடைத்தது.

காமராஜின் களப்பணியை நேரடியாகவே நேரு அப்போது அறிந்தார். 1937ஆம் ஆண்டில் நடந்த தேர்தலில் ராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள சாத்தூர் தொகுதியில் இருந்து சட்டமன்றத்துக்கு காமராஜ் தேர்வானார்.

### 14 ஆண்டுகளாக தொடர் கட்சித் தலைவர்

1940இல் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி தலைவர் பதவிக்கு தேர்தல் நடந்தபோது, பிராமணர் அல்லாத ஒருவர் கட்சிக்கு தலைவராக வேண்டும் என்பதில் ராஜாஜி மற்றும் சத்யமூர்த்தி அணியினர் உறுதியாக இருந்தனர். இதனால் ராஜாஜி பரிந்துரைப்படி சுப்பையாவை தலைவர் பதவிக்கு முன்னிறுத்த சத்தியமூர்த்தியை இணங்க வைக்க ராஜாஜி முற்பட்டார். ஆனால், முனிசாமி பிள்ளை, ருக்மணி லக்ஷ்மிபதி குமாரசாமி ராஜா போன்றோர் தலைவராக வேண்டும் என காமராஜ் விரும்பினார். கடைசியில் ராஜாஜியும் முத்துரங்கா முதலியாரும் சுப்பையாவை பரிந்துரைக்க, சத்யமூர்த்தி காமராஜை தலைவர் பதவிக்கு முன்னிறுத்தினார். அப்போது முதல் 1954ஆம் ஆண்டுவரை தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியின் தலைவராக காமராஜ் 14 ஆண்டுகளுக்கு நீடித்தார்.

### வழிகாட்டியை இழந்த காமராஜ்

காமராஜ் சிறையில் இருந்த காலத்தில் அவரது அரசியல் குருநாதரும் வழிகாட்டியுமான சத்தியமூர்த்தி 1943ஆம் ஆண்டு மார்ச் 28ஆம் தேதி காலமானார்.

1942ஆம் ஆண்டு ஏப்ரல் 11ஆம் தேதி பாகிஸ்தான் பிரிவினை தேசத்தை உருவாக்க பிரிட்டிஷ் நிர்வாகத்திடம் ஜின்னா கேட்டுக் கொண்டார். அந்த திட்டத்தை எதிர்த்த ராஜாஜி, 1944ஆம் ஆண்டு தனது திட்டத்தை முன்வைத்தார். அது காங்கிரஸ், முஸ்லிம் லீக் இடையிலான உடன்பாடு தொடர்பானது. போருக்குப் பிறகு எங்கெல்லாம் முஸ்லிம் மக்கள் அதிகமாக உள்ளனரோ, அவர்களின் சம்மதப்படி தேசப்பிரிவினைக் கோரிக்கை முடிவு செய்யப்படும். இதுபோன்ற அம்சங்கள் நிறைந்த திட்டம் "ராஜாஜி ஃபார்முலா" என அழைக்கப்பட்டது.

### இந்தியா—பாகிஸ்தான் பிரிவினை: முக்கிய துளிகள்

ஆனால், காமராஜ் உள்பட காங்கிரஸ் கட்சியில் பெரும்பாலான தலைவர்கள் ராஜாஜி திட்டத்தை ஏற்கவில்லை. இதனால், 1943ஆம் ஆண்டு ஏப்ரல் 3ஆம் தேதி ராஜாஜி, காங்கிரஸ் கட்சியின் அடிப்படை உறுப்பினர் உள்ளிட்ட பொறுப்புகளில் இருந்து விலகினார்.

1945இல் காமராஜ் சிறையில் இருந்து வெளிவரவும், காங்கிரஸ் கட்சிக்குள் ராஜாஜி மீண்டும் இணைய விருப்பம் தெரிவித்த நிகழ்வும் ஒரு சேர நடந்தது. ஆனால், ராஜாஜியின் உறுப்பினர் சேர்ப்பு நிகழ்வை காமராஜ் தள்ளி வைத்துக் கொண்டே வந்தார். இதனால் இரு தலைவர்களுக்கும் இடையிலான பனிப்போர் அதிகமாகியது. கடைசியில் அப்போதைய அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி தலைவர் மவுலானா ஆசாத், அருணா ஆசிஃப் அலி, சர்தார் படேல் ஆகியோர் காமராஜிடமும் ராஜாஜியுடனும் சமாதனம் பேச தொடர்பு கொண்டனர். இதையடுத்தே இரு தரப்பும் சமரசமாகினர்.

### கிங் மேக்கர் ஆன வரலாறு

அது 1946ஆம் ஆண்டு சட்டமன்ற தேர்தல். சாத்தூர் தொகுதியில் 30,998 வாக்குகள் வித்தியாசத்தில் வென்ற காமராஜ், தமிழ்நாடு முதல்வராக யாரை தேர்வு செய்யலாம் என காந்தியுடன் ஆலோசனை நடத்தினார். தொடக்கத்தில் ராஜாஜி அல்லது பட்டாபி சீதாராமையாவின் பெயரை நினைவில் வைத்திருந்த காந்தி, டி. பிரகாசத்தின் முன்மொழிவை விரும்பவில்லை.

விரிவான விவாதத்துக்குப் பிறகு பட்டாபி சீதாரமையாவை ஆதரிக்க ஒப்புக் கொண்ட காமராஜ், ராஜாஜியும் அவரை ஆதரிக்க கேட்டுக் கொள்ளுமாறு காந்தியிடம் வற்புறுத்தினார். ஆனால், டி. பிரகாசம், முதல்வர் பதவிக்கு போட்டியிட முடிவு செய்ததால் அவரே மெட்ராஸ் மாகாண முதல்வராக 1946ஆம் ஆண்டு ஏப்ரல் 30ஆம் தேதி ஆனார். இருப்பினும் ஓராண்டுக்கு உள்ளாகவே நம்பிக்கை இல்லா தீர்மானம் மீதான வாக்கெடுப்பில் பிரகாசம் தோல்வி அடைந்தார். அதைத்தொடர்ந்து காமராஜ் ஆதரவுடன் ஓ.பி. ராமசாமி ரெட்டியார் 1947ஆம் ஆண்டு மார்ச் 23ஆம் தேதி மாகாண முதல்வரானார்.

### காந்தியின் படுகொலையும் இந்திய சுதந்திரமும்

இந்த காலகட்டத்தில் இந்தியாவின் விடுதலைக்குப் பிந்தைய அதிகார மாற்றலை மேற்கொள்ளும் அதிகாரியாக மவுன்ட் பேட்டனை பிரிட்டன் பிரதமர் அட்லீ நியமித்தார். அதன்படியே 1947ஆம் ஆண்டு ஆகஸ்ட் 15ஆம் தேதி இந்திய விடுதலை அறிவிக்கப்பட்டு அதிகார மாற்றல் நடவடிக்கையை மவுன்ட் பேட்டன் நடைமுறைப்படுத்தினார். ஒரு புறம் இந்திய சுதந்திரம், மறுபுறம் பாகிஸ்தான் பிரிவினை மற்றும் அதையொட்டி நடந்த வன்முறை, வகுப்புவாத கலவரங்களை தடுக்கும் முயற்சியில் காந்தி ஈடுபட்டிருந்தார். ஆனால், 1948ஆம் ஆண்டு ஜனவரி 30ஆம் தேதி காந்தி சுட்டுக் கொல்லப்பட்டார் என்ற செய்தி காமராஜுக்கு பேரிடியாக இருந்தது.

1949ஆம் ஆண்டு ஓ.பி. ராமசாமி ரெட்டியாருக்கு அடுத்தபடியாக குமாரசாமி ராஜா, மெட்ராஸ் பிரசிடென்சி முதல்வரானார். அதில் காமராஜின் பங்கு மிகப்பெரியதாக இருந்தது. அவரது பதவிக்காலத்தில்தான் இந்தியாவுக்கு 1950ஆம் ஆண்டு ஜனவரி 26ஆம் தேதி குடியரசு ஆனது.

இதன் பிறகு 1950ஆம் ஆண்டு ஆகஸ்ட் 29ஆம் தேதி, தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியின் மாநில தலைவராக நான்காவது முறையாக காமராஜ் பதவியேற்றார்.

இந்திய அரசியலமைப்பின்படி, சுதந்திர இந்தியாவின் முதலாவது தேர்தல் 1952ஆம் ஆண்டு நடைபெற்றது. அப்போது தனிப்பெரும் கட்சியாக காங்கிரஸ் இருந்தபோதும், தேர்தலில் அதனால் பெரும்பான்மை பலத்தைப் பெற முடியவில்லை. மொத்தம் உள்ள 375 இடங்களில் 152இல் மட்டுமே காங்கிரஸ் கட்சி வென்றது. காமராஜின் கருத்துகளை ஏற்காமல் கம்யூனிஸ்ட் கட்சிகளின் முயற்சியால் உருவான ஆறுக்கும் மேற்பட்ட கட்சிகளின் ஆதரவுடன் ஐக்கிய ஜனநாயக கூட்டணி அமைக்கப்பட்டது. அதில் இருந்த டி.டி. கிருஷ்ணமாச்சாரி, அரசின் தலைமை பதவியை ராஜாஜி வகிக்க வேண்டும் என குரல் கொடுத்தார்.

இதனால் காமராஜ், 1952ஆம் ஆண்டு ஏப்ரல் 30ஆம் தேதி தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி தலைவர் பதவியில் இருந்து விலகினார். பிறகு பி. சுப்பராயன் மாநில தலைவரானபோதும் எட்டு மாதங்கள் மட்டுமே அவரால் அப்பதவியில் நீடிக்க முடிந்தது. அதன் பிறகு மீண்டும் காங்கிரஸ் கட்சி மாநில தலைவராக காமராஜும்,

இந்திய காங்கிரஸ் சட்டமன்ற கட்சி தலைவராக ராஜாஜியும் நியமிக்கப்பட்டனர். 1954ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம்வரை அவர்கள் இருவரும் இணைந்து பணியாற்றினர்.

### ராஜாஜியின் வீழ்ச்சி

சிறந்த உணவு திட்டமிடல் நிர்வாகியாகவும் கம்யூனிஸ்டுகளை சமாளிக்கக் கூடியவராகவும் ராஜாஜி அறியப்பட்டபோதும், அவரது சில முடிவுகள் சொந்த கட்சி உறுப்பினர்களாலேயே எதிர்க்கப்பட்டது.

இந்திய விடுதலைதான் காங்கிரஸின் நோக்கம். அது நிறைவேறி விட்டதால், காங்கிரஸ் கட்சியை கலைக்க வேண்டும் என ராஜாஜி முழக்கமிட்டார். பிறகு சிக்கன நடவடிக்கையாக சுதந்திர போராட்ட தியாகிகளுக்கு வழங்கப்படும் நிலம் ஒதுக்கீடு, காந்தியின் கொள்கைக்கு எதிரானது என்பதால், அதை வழங்கக்கூடாது என்று அவர் உத்தரவிட்டார்.

எல்லாவற்றுக்கும் உச்சமாக, கல்வித்துறை அமைச்சருடன் கலந்தாலோசிக்காமலேயே புதிய குலக்கல்வித் திட்டத்தை அறிமுகப்படுத்தினார் ராஜாஜி. அப்போது அவருக்கு எதிராக கிளம்பிய எதிர்ப்பு, ஒன்று குலக்கல்வி திட்டத்தை ராஜாஜி கைவிட வேண்டும் அல்லது முதல்வர் பதவியை துறக்க வேண்டும் என்ற இரு வாய்ப்புகளை அவருக்குத் தந்தது. கடைசியில், தனது திட்டத்தை எதிர்ப்பது, தன்னையே எதிர்ப்பது போல எனக்கூறி தனது பதவியை 1954ஆம் ஆண்டு மே 25ஆம் தேதி ராஜினாமா செய்தார் ராஜாஜி.

### சென்னையை தக்க வைத்த காமராஜ், ராஜாஜி

முன்னதாக, ராஜாஜி ராஜினாமா செய்த காலத்தில், மெட்ராஸ் மாகாணம், மொழி அடிப்படையில் பிரிக்கப்படவில்லை. இதனால், மெட்ராஸ் நகரை ஆந்திர பிரதேசத்துடன் இணைக்கும் தனி திட்டத்துக்கு எதிராக நேருவின் ஆதரவை காமராஜும் ராஜாஜியும் பெற்றனர்.

இதன் பிறகு 1952ஆம் ஆண்டில் ராஜாஜி தனது முதல்வர் பதவியை ராஜினாமா செய்த பிறகு, ஸ்ரீவில்லிபுத்தூரில் நடந்த முதல் மக்களவை பொதுத்தேர்தலில் காமராஜுக்கு 46.77 வாக்குகளும் ஜி.டி. நாயுடுவுக்கு 34.73 சதவீதமும் வாக்குகள் கிடைத்தன.

அப்போது ராஜாஜி ஏற்படுத்திய வெற்றிடத்தை உணர்ந்த காங்கிரஸ் மேலிடம், மாநிலத்தின் முதல்வராக காமராஜ் இருந்தால் அது கட்சியின் வளர்ச்சிக்கு உதவும் என நம்பியது. இதைத்தொடர்ந்து நடந்த வாக்கெடுப்பில் சி. சுப்பிரமணியத்துக்கு ஆதரவாக 41 வாக்குகளும் காமராஜுக்கு ஆதரவாக 93 வாக்குகளும் கிடைத்தன.

### 1954 – முதல் அமைச்சரவை

மாநில முதல்வராக பதவி ஏற்கும் முன்பு ஒரு உறுதிமொழியை கட்சித் தொண்டர்களிடம் இருந்தும் சட்டமன்ற உறுப்பினர்களிடம் இருந்தும் பெற்றுக் கொண்டார் காமராஜ். 1957ஆம் ஆண்டு மார்ச் 13ஆம் தேதிவரை அவரது அமைச்சரவை இருந்தது. உள்கட்சி அளவில் நடந்த முதல்வருக்கான தேர்வில் தன்னை எதிர்த்து போட்டியிட்ட சி. சுப்பிரமணியம் ராஜாஜியின் ஆதரவாளர் என்றபோதும், அவரை அழைத்து அவருக்கு நிதியமைச்சர் பதவியைக் கொடுத்தார் காமராஜ்.

காமராஜ் முதல்வராக இருந்தபோது அவர் எம்எல்ஏ ஆக பதவி வகிக்கவில்லை. அவர் எம்எல்சி ஆக இருந்தார். இதனால் பின்வாசல் வழியாக முதல்வர் பதவிக்கு வந்தவர் காமராஜ் என்ற விமர்சனம் வலுத்தது. அப்போது காலியாக இருந்த வட ஆற்காட்டில் உள்ள குடியாத்தம் தொகுதியில் போட்டியிட விரும்பினார் காமராஜ். இடதுசாரி கட்சிகளைத் தவிர வேறு யாரும் காமராஜை எதிர்க்கவில்லை. திராவிடர் கழகம், திமுக ஆகியவை காமராஜை ஆதரித்தன. அவருக்கு ஆதரவாக அந்த கட்சிகளின் நாளேடுகளில் கட்டுரைகள் வெளியிடப்பட்டன.

1957இல் மெட்ராஸ் மாகாணத்துக்கு நடந்த பொதுத்தேர்தலில் சாத்தூர் தொகுதியில் இருந்து தேர்வான காமராஜுக்கு 36,400 வாக்குகள் கிடைத்தன. அப்போது 205 சட்டமன்ற தொகுதிகளில் 151 இடங்களில் காங்கிரஸ் வென்றது.

1957ஆம் ஆண்டு, ஏப்ரல் 13ஆம் தேதி இரண்டாவது முறையாக தொடர்ந்து முதல்வரானார் காமராஜ். இரண்டாவது அமைச்சரவையிலும் காமராஜ் நீங்கலாக ஏழு பேர் இடம்பிடித்தனர்.

1962ஆம் ஆண்டு பொதுத்தேர்தலிலும் சாத்தூர் தொகுதியிலேயே போட்டியிட்ட காமராஜுக்கு, மொத்தம் பதிவான 1,01,991 வாக்குகளில் 49,950 வாக்குகளும், அவரை எதிர்த்துப் போட்டியிட்ட ஸ்வதந்திரா கட்சி வேட்பாளர் பி. ராமமூர்த்திக்கு 33,506 வாக்குகளும், சுயேச்சை வேட்பாளர் ராமசாமி ரெட்டியாருக்கு 2,811 வாக்குகளும் செல்லாத வாக்குகள் 3,044 என்றும் பதிவானது.

அந்த தேர்தலில் மொத்தம் இருந்த 206 தொகுதிகளில் 136 இடங்களில் காங்கிரஸ் பெற்றது. அதுவரை ஏழு பேரை மட்டுமே தனது அமைச்சரவையில் சேர்த்து வந்த காமராஜ், மூன்றாவது அமைச்சரவையில் எட்டு பேரை தனது அமைச்சரவையில் கொண்டிருந்தார். அந்த அமைச்சரவையில் கே. காமராஜ் நீங்கலாக, ஆர். வெங்கட்ராமன், எம். பக்தவத்சலம், ஜி. பூவராகவன், என். நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார், பி. கக்கன், வி. ராமையா, ஜோதி வெங்கடாச்சலம், எஸ்.எம். அப்துல் மஜீத் ஆகியோர் இருந்தனர்.

### தோல்வி முகத்தில் காங்கிரஸ்

தமிழ்நாட்டில் 1957ஆம் ஆண்டு தேர்தலுடன் ஒப்பிடும்போது இரண்டு சதவீத வாக்குகளை காங்கிரஸ் கட்சி கூடுதலாகப் பெற்றபோதும், அதில் அக்கட்சி 13 இடங்களை பறிகொடுத்திருந்தது. சி.என். அண்ணாதுரை தலைமையிலான திராவிட முன்னேற்ற கழகம், முந்தைய தேர்தலில் பெற்ற 15 இடங்கள் என்ற நிலையைக் கடந்து இம்முறை 50 எம்எல்ஏக்களுடன் சட்டமன்றத்துக்குள் நுழைந்தது.



முந்தைய தேர்தலில் எங்கெல்லாம் காங்கிரஸ் தோற்றதோ அங்கெல்லாம் 1962ஆம் ஆண்டு தேர்தலில் தீவிரமாக பிரசாரம் செய்தார் காமராஜ். அதில் திமுக வென்ற 15 தொகுதிகளில் 14 இடங்களை மீட்டது காங்கிரஸ். ஒரு இடத்தில் மட்டும் திமுக பொருளாளர் சொற்ப வாக்குகள் வித்தியாசத்தில் வென்றிருந்தார். இருந்தபோதும், அந்த தேர்தலில்தான் 50 இடங்களில் திமுக வென்று தனது வாக்கு சதவீதத்தை பெருக்கிக் கொண்டது.

என்னதான் தமது அரசு மக்கள் நலத் திட்டங்களை செயல்படுத்தினாலும், பெருவாரியான மக்களின் கவனம் திமுகவை நோக்கி திரும்புவதை கவனித்தார் காமராஜ். ஆட்சி, அதிகாரத்தில் தங்களின் கவனத்தை கட்சிரஸார் செலுத்துவதாகக் கூறிய அவர், அதே ஈடுபாட்டை மக்கள் சேவை மற்றும் வீழ்ச்சியை சந்திக்கும் கட்சியை மீட்பதிலும் கொண்டிருக்க வேண்டும் என்ற முடிவுக்கு வந்தார் காமராஜ்.

அந்த முடிவுக்கு அச்சாரமாக தனது முதல்வர் பதவியை ராஜினாமா செய்து விட்டு, கட்சியை வலுப்படுத்தும் முயற்சியில் நேரடியாகவே களமிறங்கினார் காமராஜ். அவரது இந்த திடீர் நடவடிக்கை, காங்கிரஸ் கட்சியில் ஆட்சியிலும் பதவியிலும் உள்ள தலைவர்களும் அரசுப் பொறுப்பை உதறி விட்டு கட்சியை வலுப்படுத்தும் முயற்சிக்கு வித்திட்டது. இதுவே, பிரபலமாக காமராஜ் திட்டம் அல்லது கே திட்டம் என்று அழைக்கப்பட்டது.

### கே–திட்டமும் காமராஜின் விளக்கமும்

1963ஆம் ஆண்டில் ஹைதராபாதில் நடந்த கட்சி மாநாட்டில் செய்தியாளர்களிடம் பேசிய காமராஜ், கே–திட்டத்துக்கு நேருவின் ஒப்புதலை பெற்றதாக தெரிவித்தார். அப்போது அவர், ஆட்சியும் அதிகாரமும் கட்சியில் உள்ள எந்தவொரு தனி நபரின் சொத்தாக இருக்கக் கூடாது. அந்த வகையில், எந்தவொரு தனி நபரும் 10 ஆண்டுகளுக்கும் மேலாக எந்தவொரு பதவியிலும் தொடருவது கட்சிக்கு எந்த பயனையும் தரப்போவதில்லை என்று கூறினார்.

தனது ராஜினாமா முடிவைத் தொடர்ந்து, தமிழ்நாடு முழுவதும் கிராமம், கிராமமாக சுற்றுப்பயணம் செய்து காங்கிரஸ் கட்சியின் தொண்டர்களுடன் முழு நேரத்தை செலவிட்டு கட்சியை அணி வேர் அளவில் வலுப்படுத்தப் போவதாக காமராஜ் தெரிவித்தார்.

1962ஆம் ஆண்டு ஆகஸ்ட் 12ஆம் தேதி, டெல்லி சட்டப்பேரவை உறுப்பினர்களிடம் பேசிய நேரு, காமராஜ் வகுத்த திட்டம் இதுவரை எந்தவொரு கட்சியும் சிந்திக்காத, ஈடு இணையற்ற திட்டம் என்று புகழாரம் சூட்டினார். கே–திட்டம், தமிழ்நாடுக்கு மட்டுமின்றி இந்தியா முழுவதும் விரிவடைய வேண்டும் என்று அவர் விரும்பினார். அடுத்த இரு வாரங்களில் காங்கிரஸ் ஆளும் மத்திய, மாநில அரசுகளில் யாரெல்லாம் பதவி விலகுவார்கள், கட்சியை வலுப்படுத்துவார்கள் என்ற பட்டியலை வெளியிட்டார் நேரு.

அதன் விளைவாக, அப்போது மத்தியில் அமைச்சர்களாக இருந்த லால் பகதூர் சாஸ்திரி (உள்துறை), மொரார்ஜி தேசாய் (நிதித்துறை), ஜெகஜீவன் ராம் (அஞ்சல் துறை), எஸ்.கே. பாட்டீல் (உணவுத்துறை), கோபால் ரெட்டி (வானொலி ஒலிபரப்பு), ஸ்ரீ மாலி (கல்வி) மற்றும் மாநிலத்தில் முதல்வர்களாக இருந்த காமராஜ் (தமிழ்நாடு), பட்நாயக் (ஒரிசா), சி.பி. குப்தா (உத்தர பிரதேசம்), பினோதானந்த்ஜா (பிஹார்), மந்த்லாய் (மத்திய பிரதேசம்) ஆகியோர் பதவியை ராஜினாமா செய்து விட்டு முழு நேர கட்சிப்பணிக்கு திரும்பினார்கள்.

### தற்கொலைக்கு சமம்: பெரியார் விமர்சனம்

1963ஆம் ஆண்டு அக்டோபர் 2ஆம் தேதி காமராஜ் தனது முதல்வர் பதவியை ராஜினாமா செய்தபோது, அவருக்கு திராவிடர் கழக தலைவர் ஈ.வெ. ராமசாமி ஒரு தந்தி அனுப்பினார். அதில், காமராஜின் முடிவு அவருக்கு மட்டுமின்றி தமிழக மக்கள் தற்கொலை செய்து கொள்வதற்கு ஒப்பானது என்று ஈ.வெ.ரா குறிப்பிட்டார்.

காமராஜின் ராஜினாமாவுக்குப் பிறகு தமிழக முதல்வராக பக்தவத்சலம் பதவியேற்றார். அவரது அமைச்சரவை 1963ஆம் ஆண்டு அக்டோபர் 2ஆம் தேதி பதவியேற்றது.

காமராஜின் அதிரடி அறிவிப்பாலும் செயல்பாடுகளாலும் நெகிழ்ச்சி அடைந்த நேரு, அவர்தான் அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி தலைவராக வேண்டும் என்று விரும்பினார். ஆனால், தொடக்கத்தில் அதை ஏற்க மறுத்த காமராஜ், நேருவின் மூன்று மாத அழுத்தத்துக்குப் பிறகு அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியின் தலைவராக 1964ஆம் ஆண்டு ஜனவரி 1ஆம் தேதி பதவியேற்றார்.

அதே மாதம் 5ஆம் தேதி ஒரிசாவில் நடந்த கட்சி நிகழ்ச்சியில் திடீரென நேரு உடல் நலம் குன்றிப்போனார். உடல்நிலை மோசமடைந்து வந்த நிலையில், அதே ஆண்டு மே மாதம் 27ஆம் தேதி நேரு காலமானார்.

நேரு காலமானதையடுத்து அவர் வகித்து வந்த இந்திய பிரதமர் பதவிக்கு மூத்த அமைச்சரவை உறுப்பினரான குல்ஸாரிலால் நந்தாவை தற்காலிக பிரதமராக அப்போதைய குடியரசு தலைவராக இருந்த ராதாகிருஷ்ணன் நியமித்தார். ஆனால், லால் பகதூர் சாஸ்திரியை அப்பதவிக்கு நியமிக்கும் எண்ணத்தில் கட்சித் தலைவரான காமராஜ் இருந்தார். ஆனால், அப்போது மொரார்ஜி தேசாய்க்கும் பிரதமராகும் எண்ணம் இருந்தது. இந்த விவகாரத்தில் கருத்தொற்றுமை அடிப்படையில் பிரதமர் பதவிக்கு தகுதியான வரை தேர்வு செய்யும் அதிகாரத்தை காமராஜுக்கு காங்கிரஸ் காரிய கமிட்டி வழங்கியது.

இதையடுத்து மொரார்ஜி தேசாயிடம் பேசி, லால் பகதூர் சாஸ்திரியை பிரதமராக்க ஆதரவு தருமாறு காமராஜ் கேட்டார். ஆனால், தனக்கு அதில் விருப்பம் இல்லாதபோதும் கட்சியின் ஒழுங்குக்கு கட்டுப்பட்டு அந்த முடிவை ஆதரித்தார் மொரார்ஜி.

இந்த காலகட்டத்தில் 1965ஆம் ஆண்டு இந்தியா, பாகிஸ்தான் இடையே போர் மூண்டது. இதைத்தொடர்ந்து பிரதமர் லால் பகதூர் சாஸ்திரியுடன் காமராஜ் போர் முனைக்குச் சென்று களத்தில் உள்ள வீரர்களுக்கு உற்சாகமூட்டினர். அந்த போர் தாஷ்கென்ட் உடன்பாட்டில் இந்திய பிரதமரும் பாகிஸ்தான் பிரதமரும் கையெழுத்திட்டதன் மூலம் முடிவுக்கு வந்தது.

அந்த ஒப்பந்தம் கையெழுத்தான சில மாதங்களிலேயே நெஞ்சு வலி காரணமாக லால் பகதூர் சாஸ்திரி காலமானார். அவரது மறைவைத் தொடர்ந்து பிரதமர் பதவிக்கு தகுதி வாய்ந்தவர்களாக மொரார்ஜி தேசாய், நந்தா, சவான், ஜெகஜீவன் ராம், எஸ்.கே. பாட்டீல் ஆகியோர் தங்களைத் தாங்களே நியமிக்கும் நம்பிக்கையில் உறுதியாக இருந்தனர். இதில் மொரார்ஜி, ஜெகஜீவன் ராம், எஸ்.கே. பாட்டீல் ஆகியோர் காமராஜின் கே–திட்டத்தின்கீழ் தங்களுடைய அமைச்சரவை பதவியை துறந்தவர்கள்.

ஆனால், காமராஜின் எண்ணம் வேறு விதமாக இருந்தது. அவர் தனது மனதில் அடுத்த பிரதமராக நேருவின் மகளான இந்திரா காந்தியை தேர்வு செய்யலாம் என முன்மொழிந்தார். காமராஜின் முடிவைத் தொடர்ந்து, மொரார்ஜி நீங்கலாக மற்றவர்கள் தங்களுடைய நிலையில் இருந்து பின்வாங்கினர்.

இதையடுத்து கட்சிக்குள்ளாக மொரார்ஜிக்கும் இந்திரா காந்திக்கும் இடையே நிலவிய போட்டியில், இந்திரா காந்திக்கு ஆதரவாக 355 வாக்குகளும், மொரார்ஜிக்கு ஆதரவாக 169 வாக்குகளும் கிடைத்தன.

அந்த வகையில், நேருவுக்குப் பிறகு இந்தியாவின் இரண்டு பிரதமர்களை தேர்வு செய்யக் கூடிய நிலையில், முடிவெடுக்கும் அதிகாரத்தில் இருந்தவராக காமராஜ் இந்திய அரசியல் உலகில் அறியப்பட்டார்.

### காமராஜின் முதல் தேர்தல் தோல்வி

1967ஆம் ஆண்டு மீண்டும் தமிழக சட்டமன்ற தேர்தலில் போட்டியிட்டார் காமராஜ். விருதுநகர் தொகுதியில் அந்த ஆண்டு நடந்த வாக்குப்பதிவில் மொத்தம் 82,606 வாக்குகள் பதிவாகின. அதில் காங்கிரஸ் வேட்பாளர் காமராஜுக்கு 32,136 வாக்குகள் கிடைத்தன. ஆனால், அவரை எதிர்த்துப் போட்டியிட்ட திமுக வேட்பாளர் பி. சீனிவாசனுக்கு 33,506 வாக்குகள் கிடைத்தன.

அந்த காலகட்டத்தில் அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியின் தலைவராக காமராஜ் இருந்தார். ஒரு கட்சிக்கூட்டத்தில் பேசிய இந்திரா காந்தி, பொதுத்தேர்தலில் தோல்வியுற்ற ஒருவர், கட்சி தேர்தல்களில் போட்டியிடும் தார்மிக உரிமைகளையும் இழக்கிறார். காரணம், அவர் ஏற்கெனவே மக்களின் மதிப்பையும் நம்பிக்கையையும் இழந்தவராகி விடுகிறார் என்றார்.

இந்திரா காந்தியின் இந்த விமர்சனம் தன்னை மனதில் வைத்தே இருப்பதாக உணர்ந்த காமராஜ், 1967ஆம் ஆண்டு டிசம்பர் 7ஆம் தேதி அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி தலைவர் பதவியில் இருந்து விலகுவதற்கான கடிதத்தை வழங்கினார். அதன் பிறகு ஓராண்டு கழித்து 1969இல் நடந்த மக்களவை தேர்தலில் நாகர்கோவில் தொகுதி இடைத்தேர்தலில் காமராஜ் வெற்றி பெற்றார். அந்த தேர்தலில் மொத்தம் 5,05,976 வாக்குகள் பதிவாகின. இதில் காமராஜ் பெற்ற வாக்குகள் 2,49,437. அதே ஆண்டு காமராஜின் தாயார் காலமானார்.

மக்களவை உறுப்பினரான காமராஜை மத்திய அமைச்சராக்க இந்திரா காந்தி விரும்பிய போதும், அதை ஏற்க மறுத்த அவர், அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி தலைவராக நிஜலிங்கப்பா பதவியேற்க ஆதரவாக இருந்தார். மேலும், இந்திரா காந்தியின் பல முடிவுகளுக்கு எதிரான நிலையை காமராஜ் கொண்டிருந்தார்.

1969ஆம் ஆண்டில் காங்கிரஸ் காரிய கமிட்டி கூடி இந்திரா காந்தியை கட்சியின் அடிப்படை உறுப்பினர் உள்ளிட்ட பொறுப்புகளில் இருந்து நீக்கும் தீர்மானத்தை நிறைவேற்றியது. நாடாளுமன்ற காங்கிரஸ் தலைவர் பதவிக்கும் ஒருவரை நியமிக்க காரிய கமிட்டி கேட்டுக் கொண்டது.

ஆனால், இந்த நடவடிக்கைக்கு எதிர்வினையாற்றிய இந்திரா காந்தி, கட்சியின் தலைவராக தானே இருப்பதாகவும் நிஜலிங்கப்பாவை நீக்குவதாகவும் அறிவித்தார். இதனால், ஆரம்பகால காங்கிரஸ் ஸ்தாபன காங்கிரஸ் என்ற பெயரில் காமராஜ் தலைமையிலும் இந்திரா காந்தி தலைமையிலான கட்சி காங்கிரஸ் ஆர் என்ற பெயரிலும் இயங்கின. இரு தரப்பும் ஒருவரை யொருவர் பரஸ்பரம் பதவி நீக்கம் செய்து கொண்டன.

1969ஆம் ஆண்டில் உச்சத்துக்கு சென்ற இந்த மோதல் அந்த ஆண்டு டிசம்பர் வரை நீடித்தது. கடைசியில் 705 உறுப்பினர்களைக் கொண்ட காங்கிரஸ் கமிட்டியில் 446 பேர் இந்திரா காந்தி பக்கம் சேர்ந்தனர். இதையடுத்து அவரது தலைமையிலான காங்கிரஸ் ஆர் என்ற அணியை இந்திய தேசிய காங்கிரஸ் என்று இந்திய தேர்தல் ஆணையம் அங்கீகரித்தது.

இதைத்தொடர்ந்து காமராஜ், தலைமையிலான ஸ்தாபன காங்கிரஸ் சார்பில் 1971ஆம் ஆண்டில் நடந்த மக்களவை தேர்தலில் மீண்டும் நாகர்கோவிலில் போட்டியிட்ட காமராஜ், 2,15,324 வாக்குகளைப் பெற்றார். அவரை எதிர்த்துப் போட்டியிட்ட திமுக வேட்பாளர் எம்.சி. பாலன் 1,14,771 வாக்குகள் பெற்றார்.

காமராஜ் உயிரிழக்கும் வரை இந்த தொகுதியின் எம்.பி ஆக அவர் இருந்தார்.

### இந்திராவின் அவசரநிலை ஏற்படுத்திய தாக்கம்

1975ஆம் ஆண்டு ஜூன் 12ஆம் தேதி, ரேபரேலி மக்களவை தொகுதியில் போட்டியிட்ட இந்திரா காந்தி, அரசு இயந்திரங்களை தேர்தல் பிரசாரத்துக்கு பயன்படுத்தியதாக தீர்ப்பளித்தது. இதையடுத்து இந்திரா காந்தி பதவி விலக வேண்டும் என மொரார்ஜி தேசாய், ஜெய பிரகாஷ் நாராயண் குரல் கொடுத்தனர். இதனால், சிவில் ஒத்துழையாமை இயக்கத்துக்கு அந்த தலைவர்கள் அழைப்பு விடுத்தனர். இதனால் ஏற்பட்ட அரசியல் நெருக்கடி காரணமாக 1975ஆம் ஆண்டு ஜூன் 26ஆம் தேதி நள்ளிரவில், இந்திரா காந்தியின் பரிந்துரையின்பேரில் தேசிய அளவிலான அவசரநிலையை பிரகடனப்படுத்தினார் அப்போதைய குடியரசு தலைவர் ஃபக்ருதின் அலி அகமது. உள்நாட்டு இடையூறுகளால் தேச பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்படுவதாகக் கூறி இந்த அவசரநிலை பிரகடனப்படுத்தப்பட்டது.

அந்த காலகட்டத்தில் ஜெய பிரகாஷ் நாராயண், மொரார்ஜி, சரண் சிங் உள்ளிட்ட தலைவர்கள் கைது செய்யப்பட்டனர். ஆனால், காமராஜ் கைதாகவில்லை. அனைத்து ஊடகங்களும் தணிக்கைக்கு உட்படுத்தப்பட்டன. சரியாக ஓராண்டுக்கு முன்பு தன்னால் நாட்டின் பிரதமராக அடையாளம் காட்டப்பட்ட இந்திரா காந்தியின் இந்த செயல்பாடுகள், காமராஜுக்கு கடுமையான வலியை தந்தது. ஒரு சில நாட்களில் அவசரநிலை தளர்த்தப்படலாம் என நம்பிய காமராஜுக்கு அடுத்தடுத்து நடந்த அரசியல் கைதுப் படலம் அவரது உடல்நிலையை மோசமாக்கியது. கடுமையான காய்ச்சல், ரத்த அழுத்தம், சர்க்கரை அளவு அதிகரிப்பு போன்றவற்றால் காமராஜின் உடல்நிலை பலவீனம் அடைந்தது. 1975ஆம் ஆண்டு ஜூலை 15ஆம் தேதி தனது 73ஆம் பிறந்த நாளை மிக, மிக எளிய முறையில் கொண்டாடினார் காமராஜ். அவசரநிலை காரணமாக தன்னைத்தானே வீட்டுக்குள்ளேயே அடைத்துக் கொண்ட காமராஜ், 1975ஆம் ஆண்டு அக்டோபர் 2ஆம் தேதி பிற்பகல் 3.15 மணிக்கு நெஞ்சு வலியால் காலமானார். அப்போது முதல்வராக இருந்த கருணாநிதி, காமராஜுக்கு முழு அரசு மரியாதையுடன் இறுதி நிகழ்வை நடத்த உத்தரவிட்டார்.

1976ஆம் ஆண்டு, அவருக்கு குடிமக்களுக்கான உயரிய விருதாக கருதப்படும் பாரத ரத்னா விருது வழங்கப்பட்டது. கலை, இலக்கியம், அறிவியல், பொது அங்கீகாரம் ஆகிய துறைகளில் தனித்து விளங்கியதற்காக இறப்புக்கு பிந்தைய அங்கீகாரமாக பாரத ரத்னா விருதை காமராஜுக்கு தருமாறு அப்போதைய குடியரசு தலைவருக்கு பிரதமராக இருந்த இந்திரா காந்தி பரிந்துரை செய்தார்.

# மதுவிலக்கு திருத்தச் சட்ட மசோதா மூலம் கள்ளச் சாராயத்தை ஒழிக்க முடியுமா? சவால்கள் என்ன?



கள்ளக்குறிச்சி கள்ளச்சாராய உயிர்பலியை அடுத்து, அதைத் தடுக்கும் வகையில் கள்ளச்சாராய விற்பனையில் ஈடுபடுபவர்களுக்கு எதிரான தண்டனைகளைக் கடுமையாக்கும் வகையில் சட்டத்திருத்த மசோதா தமிழ்நாடு சட்டப்பேரவையில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இந்த நடவடிக்கைக்கு, 'இது தாமதமான நடவடிக்கை, கண் துடைப்பு' எனும் விமர்சனங்கள் எழுந்து வருகின்றன. சட்டத்தைக் கடுமையாக்குவதன் மூலம் இத்தகைய குற்றங்களைத் தடுக்க முடியுமா? விமர்சனங்களைச் சமாளிக்கும் விதமாகத்தான் இந்த நடவடிக்கையை அரசு எடுத்துள்ளதா?

கள்ளக்குறிச்சியில் சமீபத்தில் மெத்தனால் கலந்த கள்ளச்சாரயத்தை உட்கொண்டதால் 60க்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர். இச்சம்பவம் தமிழகம் முழுவதும் அதிர்வலைகளை ஏற்படுத்தியது.

கள்ளச்சாராயத்தைக் குடித்த சிலர் நிகழ்விடத்திலேயே துடிதுடித்து இறந்த நிலையில், பலரும் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு உயிரிழந்தனர். கடந்த ஆண்டும் விழுப்புரம் மாவட்டம் மரக்காணத்தில் இதேபோன்று மெத்தனால் கலந்த கள்ளச்சாராயத்தைக் குடித்து சுமார் 14 பேர் உயிரிழந்தனர்.

இத்தகைய தொடர் சம்பவங்களால் கள்ளச்சாராய ஒழிப்பு, மெத்தனால் தயாரிப்பு மற்றும் அதன் விநியோகத்தைக் கண்காணித்தல் குறித்த கோரிக்கைகள் எழுந்தன.

### மதுவிலக்கு திருத்தச் சட்ட மசோதா நிறைவேற்றம்

மேலும், அதிமுக, பாமக போன்ற எதிர்க்கட்சிகள் தமிழ்நாடு அரசை விமர்சித்தன. சட்டப்பேரவையில் மானிய கோரிக்கை மீதான விவாதங்களின் போது அதிமுக வெளிநடப்பும் செய்தது.

அதேவேளை, விடுதலைச் சிறுத்தைகள் கட்சி, இடதுசாரிக் கட்சிகள் போன்ற திமுக—வின் கூட்டணிக் கட்சிகளே அரசுக்கு கண்டனத்தைப் பதிவு செய்தன. கள்ளச்சாராய வணிகத்தின் பின்னால் உள்ள முக்கியப் புள்ளிகளைக் கண்டறிந்து நடவடிக்கை எடுப்பது குறித்தும் கூட்டணிக் கட்சிகள் கேள்விகளை எழுப்பின.

இந்நிலையில், கள்ளச்சாராயம், போதைப் பொருட்கள் விற்பனையைத் தடுக்கும் வகையிலும், அவற்றை விற்பனை செய்பவர்களுக்குக் கடுமையான தண்டனை வழங்கும் வகையிலும், 'தமிழ்நாடு மதுவிலக்கு திருத்தச் சட்ட மசோதா 2024' சனிக்கிழமை (ஜூன் 29) தமிழக சட்டப் பேரவையில் தாக்கல் செய்யப்பட்டது.

இந்த மசோதாவை மதுவிலக்கு ஆயத்தீர்வை அமைச்சர் முத்துசாமி தாக்கல் செய்தார். பின்னர், குரல் வாக்கெடுப்பு மூலம் மசோதா நிறைவேற்றம் செய்யப்பட்டது.

### என்னென்ன திருத்தங்கள்?

மசோதாவில் குறிப்பிடப்பட்டுள்ள முக்கிய அம்சங்கள்

கள்ளச்சாராயத்தைத் தயாரித்து விற்பவர்களுக்கு ரூ.10 லட்சம் அபராதம் மற்றும் ஆயுள் தண்டனை விதிக்கும் வகையில் சட்டத் திருத்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கள்ளச்சாராய குற்றங்களுக்குப் பயன்படுத்தப்படும் அசையும் சொத்துகள் பறிமுதல் செய்யப்படும்.

பிணைமுறிவை நிறைவேற்ற நிர்வாகத் துறையின் நடுவருக்கு அதிகாரம் அளிக்கும் வகையில் சட்டத் திருத்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டம் 1937இல் இந்தத் திருத்தங்கள் செய்யப்பட்டுள்ளன.

கள்ளச்சாராயத்தால் பெரும் உயிரிழப்புகள் ஏற்பட்டு, அதனால் அரசுக்கு 'அவப்பெயர்' ஏற்பட்ட பின்னரே இந்த சட்டத்திருத்தம் கொண்டு வரப்பட்டுள்ளதாக, எதிர்க்கட்சியினர் தெரிவித்துள்ளனர்.

மேலும், சட்டத்தைக் கடுமையாக்குவது இத்தகைய குற்றங்களைக் குறைப்பதில் பெரிய பலனளிக்காது எனக் கூறும் சட்ட நிபுணர்கள் சமூக ரீதியான மாற்றங்களே இதில் முக்கியம் என்கின்றனர்.

### பெரிய மாற்றத்தை ஏற்படுத்தாது'

"இது வெறும் கண் துடைப்பு நடவடிக்கை, இதுவொரு பெரிய மாற்றத்தை ஏற்படுத்தாது" என்கிறார், அ.தி.மு.க செய்தித் தொடர்பாளர் கோவை சத்யன்.

அவர் பேசுகையில், "கள்ளச்சாராயத்தைத் தடுக்க ஏற்கெனவே சட்டங்கள் இருந்தும் இந்தக் கொடூரம் நிகழ்ந்திருக்கிறது. இப்போது தண்டனையைக் கடுமையாக்குவது நல்ல நடவடிக்கையாக இருந்தாலும், இதன் கீழ் எத்தனை பேர் தண்டனை பெறுவார்கள்?" எனக் கேள்வி எழுப்புகிறார்.

மெத்தனாலை தயாரிப்பதற்குத் தேவையான மூலப்பொருட்கள் எங்கிருந்து வருகின்றன, அதைத் தடுப்பது எப்படி, மெத்தனால் தயாரிப்பவர்களுக்கு என்ன தண்டனை என்பதற்கான வலுவான பிரிவு இந்த மசோதாவில் இல்லை என, கோவை சத்யன் கூறுகிறார்.

மேலும், எத்தனை பேர் மீது வழக்குப்பதிவு செய்தாலும் கள்ளச்சாராய விவகாரத்தில் குற்றம் நிரூபிக்கப்பட்டு தண்டனை கிடைப்பது மிகவும் அரிதாகவே உள்ளது எனத் தெரிவித்தார்.

தாமதமான நடவடிக்கையா?

கள்ளச்சாராயத்தைத் தடுப்பதில் தமிழ்நாடு அரசு மிகத் தாமதமாக விழித்துக் கொண்டதாக எழும் விமர்சனங்கள் குறித்துப் பேசிய திமுக செய்தித் தொடர்பாளர் கான்ஸ்டன்டைன் ரவீந்திரன், "இதுதொடர்பாக ஏற்கெனவே உள்ள சட்டங்களில் உள்ள தண்டனைகள் போதுமானவையாக இல்லை. 1937இல் உள்ள சட்டம் அது. 2002ஆம் ஆண்டில் அதிமுக ஒரு சிறிய மாற்றத்தையே கொண்டு வந்தது. எனவேதான் இப்போது திருத்தம் செய்யப்பட்டுள்ளது.

குற்றங்கள் மிகக் கொடூரமாக மாறும்போது அதற்கேற்ப தண்டனைகளுடன் கூடிய திருத்தங்கள் தேவைப்படுகின்றன. அதைத்தான் அரசு செய்துள்ளது. அதை காலமும் குற்றத்தின் தாக்கமும்தான் முடிவு செய்கிறது," என்றார்.

அதிமுக ஆட்சியில் இத்தகைய மரணங்கள் நிகழும்போது ஏன் நடவடிக்கையோ அல்லது சட்டத்தைக் கடுமையாக்கவோ இல்லை என கான்ஸ்டன்டைன் கேள்வியெழுப்புகிறார்.

தமிழ்நாட்டில் 11 ஆலைகள்தான் மெத்தனால் தயாரிப்பதாகக் கூறும் அவர், ஒவ்வொரு மாதமும் எத்தனை ஆயிரம் லிட்டர்கள் தயாரிக்கப்பட்டது என்பது குறித்து அந்த ஆலைகள் அறிக்கை வழங்க வேண்டும் என்று கூறுகிறார். அதில், மெத்தனாலை யாருக்கு சப்ளை செய்துள்ளனர், அந்த சப்ளையர்கள் எதற்காக அதைப் பயன்படுத்தியுள்ளனர், மெத்தனால் மீதம் உள்ளதா, தேவையில்லாமல் பயன்படுத்தப்பட்டுள்ளதா என்பன போன்ற விவரங்கள் அடங்கியிருக்கும்.

"தமிழ்நாட்டிலிருந்து மெத்தனாலை பயன்படுத்தி கள்ளச்சாராயம் தயாரிக்கப்படவில்லை. இந்தச் சம்பவத்திலும் புதுச்சேரியிலிருந்துதான் வாங்கி வந்துள்ளனர்," என்கிறார் அவர்.

இரு மாநிலங்களுக்கு இடையிலான மெத்தனால் நடமாட்டத்தைத் தடுப்பதில் மத்திய உள்துறை அமைச்சகம்தான் கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என அவர் வலியுறுத்தினார்.

கள்ளச்சாராயத் தடுப்பு நடவடிக்கைகள் குறித்து சட்டமன்றத்தில் பேசிய முதலமைச்சர் மு.க.ஸ்டாலின், "இனி எங்காவது கள்ளச்சாராய உயிர்பலி நிகழுமானால் அதற்கு அந்த மாவட்ட காவல்துறை அதிகாரியும் எல்லைக்கு உட்பட்ட காவல்துறை அதிகாரியும்தான் பொறுப்பேற்க வேண்டும்," எனத் தெரிவித்தார்.

போதைப்பொருள் நடமாட்டம் குறித்தும் பேசிய முதலமைச்சர் ஸ்டாலின், அதுதொடர்பான குற்றங்களில் கைது செய்யப்பட்டவர்களின் சொத்துகள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன எனக் கூறினார். 18 கோடியே 5 லட்சம் ரூபாய் மதிப்பிலான 46 சொத்துகள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன, வங்கிக் கணக்குகள் முடக்கப்பட்டுள்ளன என அவர் தெரிவித்தார்.

இதுதொடர்பான விழிப்புணர்வுப் பிரசாரங்கள், குடிநோயாளிகளை மீட்பது ஆகியவற்றை ஓர் இயக்கமாக முன்னெடுக்க வேண்டும், அமைச்சர்கள் இத்தகைய பணிகளில் ஈடுபட வேண்டும், என்றும் மு.க.ஸ்டாலின் வலியுறுத்தினார்.



### கடும் சட்டத்தைவிட முக்கியமானது என்ன?

சட்டங்களைக் கடுமையாக்கினால் குற்றங்கள் குறையும் என்பதற்கு எவ்வித அறிவியல்பூர்வ ஆதாரங்களும் இல்லை என்கிறார், சென்னை உயர் நீதிமன்ற வழக்கறிஞர் வெற்றிச்செல்வன்.

"ஆனாலும், இந்த விஷயத்தில் அரசு ஒன்றும் செய்யவில்லை எனும் தோற்றம் இருக்கையில் இத்தகைய நடவடிக்கையை அரசு எடுத்துள்ளது. ஆனாலும், இதைவிட முக்கியமாக அரசு மதுபானங்களை விற்கும்போது அதைவிடுத்து ஏன் கள்ளச்சாராயத்தை நோக்கிச் செல்கிறார்கள் என்பதற்கான காரணங்களை அரசு ஆராய வேண்டும்," எனக் கூறுகிறார் வழக்கறிஞர் வெற்றிச்செல்வன்.

மது அருந்துதல் என்பது தமிழ்நாட்டில் சமூக வழக்கமாக இருக்கும்போது, மதுபானங்களின் தரத்தைக் கண்காணிப்பதும் அவசியமாகிறது, என்கிறார் அவர்.

கள்ளக்குறிச்சி சம்பவத்தைத் தொடர்ந்து இத்தகைய சம்பவங்களால் உடல் உழைப்பு சார்ந்த தொழில்களில் ஈடுபடும், சமூகப் பொருளாதார ரீதியாக மிகவும் பின்தங்கிய நிலையில் உள்ளவர்களே அதிகம் பாதிக்கப்படுவதாகப் பரவலான கருத்து நிலவுகிறது.

உழைப்பின் களைப்பை நீக்க அவர்கள் தினமும் சந்தை விலையைவிட மலிவான கள்ளச்சாராயத்தை நோக்கிச் செல்வதாக உள்ளூரில் செயல்படும் சமூக ஆர்வலர்கள் பலர் கூறுகின்றனர்.

"அப்படியிருக்கும்போது, அந்தத் தொழிலாளர்கள் மீதான உழைப்புச் சுரண்டலை அரசு கண்டுகொண்டு, அதிலிருந்து அவர்களை வெளியே கொண்டு வரவேண்டும். அவர்களிடம் மதுவிலக்கு பிரசாரம் செய்தால் பலன் இருக்காது," என்கிறார் வழக்கறிஞர் வெற்றிச்செல்வன்.

### 'இயக்கமாக முன்னெடுக்க வேண்டும்'

திண்டிவனத்தைச் சேர்ந்த வழக்கறிஞரும் சமூக ஆர்வலருமான பூபால் கூறுகையில், "இது தாமதமான நடவடிக்கைதான், இருந்தாலும் இப்போதாவது அரசு விழித்துக்கொண்டுள்ளது. எனினும், சட்டத்தை நிறைவேற்றினால் மட்டும் போதாது. அதை மக்களிடம் கொண்டு சென்று விழிப்புணர்வை ஏற்படுத்தினால்தான் நீண்ட கால விளைவாக பலன் ஏற்படும்," என்றார்.

கள்ளச்சாராய ஒழிப்பு நடவடிக்கையில் காவல்துறையின் பங்கு குறித்து பல கேள்விகளும் சந்தேகங்களும் எழுவதாகக் கூறும் பூபால், கள்ளச்சாராய ஒழிப்புக்காக ஒழுங்குபடுத்தப்பட்டு, அர்ப்பணிக்கப்பட்ட தனிப்பிரிவு அமைத்து இந்தச் சட்டத்தை நிறைவேற்றுவது, தொடர்ச்சியாகக் கண்காணிப்பது போன்ற நடவடிக்கைகளில் அரசு ஈடுபட வேண்டும் என வலியுறுத்துகிறார்.

அதுதவிர, பொதுநல அமைப்புகள், வழக்கறிஞர்கள், சமூக ஆர்வலர்கள், பொதுமக்கள் பிரதிநிதிகள், பெண்கள் அமைப்புகள், சுய உதவிக் குழுக்களை ஒருங்கிணைத்து, குழு ஏற்படுத்தி இயக்கமாக இதை முன்னெடுக்க வேண்டும் என பூபால் போன்ற சமூக ஆர்வலர்கள் வலியுறுத்துகின்றனர்.

"மிக முக்கியமாக கிராமந்தோறும் இத்தகைய குழுக்களை அமைத்து கள்ளச்சாராய நடமாட்டம் குறித்துத் தீவிரமாக கண்காணிக்க வேண்டும்," என்கிறார் அவர்.

# கள்ளச்சாராயத்தை எதிர்த்து ஒன்றிணைந்து போராட வேண்டிய நேரம் வந்து விட்டது!





தற்போது கள்ளக்குறிச்சியில் நிகழ்ந் திருக்கும் கள்ளச்சாராய மரணம் கடந்த 20 ஆண்டுகளில் தமிழ்நாட்டில் நடந்த மிகப்பெரிய கள்ளச்சாராய மரண சம்ப வங்களில் ஒன்றாக உள்ளது.

யார் அதிகப் போதை தரும் சாரா யத்தை விற்கிறார்கள் என்ற போட்டியில் மெத்தனால் கலந்து விற்கும் நிலை சில இடங்களில் காணப்படுவதாக இதில் மூழ்கி யிருக்கும் அன்றாடக் குடிகாரர்கள் கூறு கிறார்கள்.

இவை மலிவு விலை சமாச்சாரம் என் பதால் தினக்கூலி சாமானியனுக்கு விருப்ப மானதாக இருக்கிறது!

குறிப்பாக விவசாயக் கூலி வேலை, சுமை தூக்கும் வேலை, பெயிண்டிங், பிளம் பிங், கொத்தனார், சித்தாள், காவலாளி போன்ற வேலைகளை செய்பவர்கள் பணிக்கு செல்லும் அதிகாலையிலும் வேலைமுடித்து இரவு வீட்டிற்கு திரும்பும் முன்பும் இவர்கள் இந்த கள்ளச்சாராயப் போதைக்கு அடிமையாகிவிடுகின்றனர்.

மது போதை இருந்தால் மட்டுமே இது போன்ற கடினமான பணிகளில் ஈடுபட முடியுமா?

இதுவரை வடகிழக்கு பகுதியில் இருந்து தமிழகத்தில் பணிகளுக்காக வந்த இளைஞர் எவரும் போதையுடன் மட்டுமே பணியாற்ற முடியும் எனக் கூறியதே கிடையாது!

மதுசாராய பார்களில் கூட அவர்கள் குழுமி குடித்து மயங்கி மந்த நிலையில் மகிழ்ந்து வாழ்ந்தது கிடையாது, ஆகக் கடின வேலைகளுக்கும் மகிழ்ச்சிக் கொண் டாடங்களுக்கும் தேவையற்றது மது சாராயம்!

கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் இந்த ஆண்டு தமிழ்நாட்டில் கள்ளச்சாராய விற்பனை 20% அதிகரித்துள்ளதாக காவல்துறை தெரிவித்துள்ளது.

**முன்பு நடந்த சம்பவங்கள்...**

2023 மே மாதம் விழுப்புரம் மாவட் டம் மரக்காணம் மற்றும் செங்கல்பட்டின் மதுராந்தகத்தில் கள்ளச்சாராயம் குடித் ததில் 21 பேர் உயிரிழந்தனர்.

2008—ம் ஆண்டு தமிழ்நாடு—கர்நாடக எல்லையில் கள்ளச்சாராயம் குடித்து 148 பேர் பலியாகினர், இதில் 41 பேர் தமிழர் கள். இந்த சம்பவத்தைத் தொடர்ந்து 21 போலீசாரை தமிழ்நாடு அரசு பணியிடை நீக்கம் செய்தது.

2001—ம் ஆண்டு பண்ருட்டியில் கள் ளச்சாராயம் குடித்ததில் 52 பேர் இறந்தாக டைம்ஸ் ஆப் இந்தியா செய்தியில் குறிப் பிட்டுள்ளது. 20 பேருக்குக் கண்பார்வை பறிபோனது. புதுச்சேரியிலிருந்து சில வியாபாரிகள், கள்ளச்சாராயத்தைக் கொண்டுவந்து விற்றதாக செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

கள்ளச்சாராயத்தை தடுப்பது தமிழ் நாடு மதுவிலக்கு கலால் பிரிவு காவல் துறையின் பொறுப்பாகும். கடந்த 2021 முதல் கள்ளச்சாராயத்துக்கு எதிரான நடவடிக்கையில் 4 லட்சத்து 60 ஆயிரம் பேர் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் அதில் 565 பேர் குண்டர் தடுப்பு சட்டத் தில் கைது செய்யட்டிருப்பதாகவும் தமிழக முதல்வர் ஸ்டாலின் சட்டமன்றத்தில் தெரிவித்தார்.

கடந்த வருடம் நடந்த மரக்காணம் கள்ளச்சாராய மரணத்தில் சி.பி.சி.ஐ.டி காவல்துறையினர் 21 பேரை கைது செய்ததுடன் அதில் 8 பேரைக் குண்டர் தடுப்பு சட்டத்தில் கைது செய்து சிறையில் அடைத்துள்ளனர்.

தினசரி ரூ 500 சம்பாதிக்கும் ஒரு தொழிலாளி கூட டாஸ்மாக் கடைக்குச் சென்று 120 முதல் 150 ரூபாய் செலவழித்து மதுபானம் அருந்த விரும்புவதில்லை.

மேலும் தமிழகத்தில் டாஸ்மாக் கடைகளில் எல்லாத் தரப்பு மக்களின் நிதி வசதிக்கு ஏற்ப விலைகளில் மது பானங்கள் இருந்தும் எல்லா பொருட்களுக்கும் 'விசேச' பிரீமியம் குறைந்தது ரூ.5 முதல் ரூ 60 வரை தரப்பட வேண்டிய நிலையில் இப்படிப்பட்ட மலிவு விலையில் அதிமிஞ் சிய போதை தரும் வஸ்துக்கள் கிடைப்ப தால் அவை வரவேற்பு பெறுவது ஏன் என்று புரிகிறது, அதற்கான விலைதான் இப்படிப்பட்ட கொடூர சாவுகள்.

தமிழக காவல்துறை சார்பில் போலீஸ் மற்றும் பொதுமக்கள் இடையே நல்லுறவை ஏற்படுத்த 'கிராமக் காவலர்கள்' திட்டம் கடந்த 2021—ம் ஆண்டு தொடங்கப்பட்டது. இந்த திட்டத்தின் கீழ் பொதுமக்கள் தங்களது பகுதியில் நடக்கும் பிரச்னைகள், சந்தேக நபர்களின் நடமாட்டம், கள்ளச் சாராயம் விற்பனை குறித்து புகார் அளிக்க ஊக்கம் அளிக்கப்பட்டது.

கள்ளச்சாரயத்தின் ஆபத்துகள் குறித் தும் பொதுமக்களுக்கு விழிப்புணர்வு அளிக்கப்பட்டது. ஆனால் இந்தத் திட்டம் அரசு எதிர்பார்த்த அளவில் மக்களிடையே சென்று சேரவில்லை என்பதையே கள்ளக் குறிச்சிச் சம்பவம் எடுத்துரைப்பதாக அமைந்துள்ளது.

இந்தக் கிராமக் காவல் திட்டத்தின் கீழ் ஊராட்சி மன்றத் தலைவர்கள், கிராம நிர்வாக அலுவலர்கள், தலையாரிகள் ஆகி யோரை காவல்துறை தொடர்பு கொண்டு அந்தந்த கிராமத்தில் முறைகேடாகச் சாரா யம் விற்பது குறித்தும் அதில் ஈடுபடுவோர் குறித்தும் தகவல் அளிக்க அவர்களை வலியுறுத்த வேண்டும். மாவட்டம் முழுவதும் கிராம அளவில் சாராயத்தை உட்கொள்வதால் ஏற்படும் தீமைகள் குறித்து மக்களிடையே விழிப்புணர்வை காவல்துறை அதிகாரிகள் ஏற்படுத்த வேண்டும்.

கள்ளக்குறிச்சியில் மட்டுமின்றி பல ஊர்களிலும் 24 மணிநேரமும் இந்த கள் ளச்சாராயம் கிடைப்பதாகவும் அதுவும் ஆட்டோ, இருசக்கர வாகனம் என பல வற்றிலும் கொண்டு வந்து வீட்டிலேயே கொடுத்துவிட்டு போகும் வழக்கம் உள்ள தாகவும் அப்பகுதி பெண்கள் கதறுகி றார்கள்.


பாக்கெட் ஒன்றின் விலையோ வெறும் ரூ50! பால் பாக்கெட்டின் விலை யை விட சற்றே கூடுதல்...

தமிழ்நாட்டில் 5,329 டாஸ்மாக் மது பான கடைகள் இருந்தபோதிலும் கள்ளச் சாராய விற்பனை தொடரக் காரணம் புரிகிறதா?

மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தி னால் மட்டுமே கள்ளச்சாராய ஆபத்திலி ருந்து அவர்களைக் காப்பாற்ற முடியும்.

கள்ளச்சாராயம் ஒரு சமூக பிரச்சனை என்பதை நாம் உணரந்து அதன் விற்ப னைக்கும் அதைக் குடிப்பவர்கள் மன மாற்றத்துக்கும் ஒன்றிணைந்து போராட வேண்டிய நேரம் வந்துவிட்டது.

# விருதுப்பட்டி வித்தகன்



காமராஜ் கல்கியின் பொன்னியின் செல்வன் இல்லை
குமாரசாமியின் சிவகாமியின் செல்வன்

❖ கோகினூரிலிந்து கொள்ளையடிக்கப்பட்ட வைரம் இல்லை
விருதுப்பட்டியிலிருந்து வெட்டி எடுக்கப்பட்ட கட்டித்தங்கம்

❖ தமிழுக்கு தனியிலக்கணம் தந்த தொல்காப்பியன் இல்லை
அரசியலுக்கு அணியிலக்கணம் தந்த சொல்காப்பியன்

❖ காமத்துப்பால் கலவாத திருக்குறள்
இதுவரை அறத்துப்பாலில் இணையாத அதிகாரம்

❖ பல்கலைக் கழக பெயர்ப்பலகை மட்டுமல்ல காமராஜ்
அவன் கட்டாயபாடமாக வேண்டிய பாடத்திட்டம்.

❖ காற்றில் கரைந்து போகும் கற்பூரமல்ல காமராஜ்
கப்பலை கரைசேர்த்த நங்கூரம்
தமிழனுக்கு கர்வம் தந்த கம்பீரம்

❖ எல்லையைத் தாண்டி வந்து குமரியின் தாகம் தீர்த்த தாமிரபரணி

❖ திருவாசகத்தில் ஒருவாசகம்கூட பயிலாத பெருவாசகம்

❖ இந்தியாவின் பட்டத்து யானை

❖ அவன் ஆள்காட்டி விரலில் பிரதமர்களின் பட்டியல் ஆடிப்போகும்

❖ காமராஜ் வெல்ல முடியாத வெற்றி
மூழ்க முடியாத ஆழம்
ஏறமுடியாத உயரம்
கடக்க முடியாத தூரம்
கணக்கிட முடியாத எண்ணிக்கை

❖ அவன் தொண்டுகளை அடுக்கினால்
அதன் கொண்டையில் வானம் தட்டும்
இன்றுவரை பூமி சுற்றிய சுற்றுகளின் மொத்தம்
அவற்றைப் புத்தகமாக்க இந்த பூமியில் பதிப்பகங்கள் பத்தாது
அது தொடக்கம் தெரியாத பூமியின் பாதை

❖ பாதியில் நிற்கும் பாரதியின் பாஞ்சாலி சபதம்
மீதியைத் தர மீண்டும் அவனே வரவேண்டும்

❖ காமராஜ் வாடகை வீட்டில் வாழ்ந்த கொத்தனார்
மாற்றுத்துணி இல்லாத நெசவாளி
கருப்பு நிறத்தில் கரந்த பால்

❖ ஆறடி உயர திருவிளக்கு
நடை பாதைக்கும் வெளிச்சம் தந்த
நகராட்சி தெருவிளக்கு.



# மது போதை கணவர்கள் இறப்பால் தமிழகத்தில் விதவைகள் எண்ணிக்கை அதிகரிப்பு!

## தமிழக அரசு நடவடிக்கை எடுக்க கைம்பெண்கள் ஆதரவற்ற நலச்சங்கம் சார்பில் கோரிக்கை!




தமிழகத்தில் மது போதை காரணமாக கணவர்கள் இறப்பால் விதவைகள் எண்ணிக்கை அதிகரித்து வருவதாகவும், அவர்கள் வாழ்வாதாரத்தை மேம்படுத்த தமிழக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் கைம்பெண்கள் ஆதரவற்ற நலச்சங்கம் சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து 'லாஸ்' லிகிகிஷி மையம் நிர்வாகிகள் ராஜகுமாரி, ஆலாய்சஸ் இருதயம், பால் மைக்கேல்ராஜ், கைம்பெண்கள் ஆதரவற்ற நலச்சங்கம் தலைவர் அன்புச் செல்வி, துணைச் செயலாளர் சுதா, விதவைப் பெண்கள் வாழ்வுரிமை சங்கம் கஸ்தூரி, ஆகியோர் செய்தியாளர்களிடம் கூறியதாவது: கடந்த 2011ஆம் ஆண்டு இந்திய மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி இந்தியாவில் வாழும் விதவைகளின் மொத்த எண்ணிக்கை 4.3 கோடி. இது நாட்டிலுள்ள மொத்தப் பெண் களது எண்ணிக்கையில் 7.3 சதவீதம் ஆகும்.

தமிழகத்தை பொறுத்தவரை, 2011—ம் ஆண்டு அடிப்படையில் வாழும் விதவைப் பெண்களின எண்ணிக்கை 38.56 லட்சமாக இருந்தது. இது தமிழகத்தில் வாழும் மொத்த பெண்களின் எண்ணிக்கையில் 10.7 சதவீதம். அப்படியானால், இப்புள்ளி விவரத்தின்படி தமிழகத்தில் வாழும் விதவைகளின் எண்ணிக்கை தேசிய அளவை விட 3.4 சதவீதம் அதிகம். தற்போது தமிழகத்தில் 40 லட்சம் விதவைகள் இருக்கலாம் எனக் கருதப்படுகிறது.

தமிழத்தில் அரியலூர், சென்னை, திருப்பூர், திண்டுக்கல், ஈரோடு, காஞ்சிபுரம், ராமநாதபுரம், கரூர், மயிலாடுதுறை, நாகப்பட்டினம், நீலகிரி, பெரம்பலூர், சிவகங்கை, தேனி, திருச்சி மற்றும் விழுப்புரம் ஆகிய 16 மாவட்டங்களிலிருந்து ஒரு மாவட்டத்திற்கு 30 அல்லது 31 கைம்பெண்கள் வீதம் 495 விதவைப் பெண்களிடம் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. அவர்கள் தங்கள் கணவர்கள் இறப்பிற்கு மது போதை, கஞ்சா மற்றும் போதைப்பொருட்கள், விபத்து, தற்கொலை, கரோனா போன்ற 9 காரணங்களை கூறுகின்றனர்.

இதில், மதுபோதையில்தான் அதிகளவு கணவர்கள் இறந்துள்ளதாக அந்தப் பெண்களிடம் நடத்திய ஆய்வில் தெரிய வருகிறது. மிகப் பெரிய எண்ணிக்கையில் விதவைகள் நமது நாட்டில் வாழந்து வந்த போதிலும், அவர்களின் உள்ளார்ந்த துயர்களை நமது சமூகம் பெரிதாகக் கண்டு கொள்வதில்லை. பாரம்பரியம், மதப் பழக்கம், கலாச்சாரம் ஆகியவற்றின் பெயரால் அவர்கள் மீது இழைக்கப்டுபடுகின்ற பாகுபாடு மற்றும் வன்கொடுமைகள் நியாயப்படுத்தப்படுகின்றன.

விதவைப் பெண்கள் மத்தியில் கடன் என்பது ஒரு பெரிய பிரச்சினையாக இருக்கின்றது. ஏறக்குறைய 85 சதவீதம் விதவைப் பெண்கள் கடனாளிகளாக இருக்கின்றனர். அவர்களில் ஒரு சிலர் சுய உதவிக் குழுக்களிடமிருந்து குறைந்த வட்டி விகத்தத்தில் கடன் பெற்றிருக்கின்றனர். ஆனால் 50 சதவீதம் பேர் கந்து வட்டிக்காரர்கள் மற்றும் சிறு நிதி நிறுவனங்களிடமிருந்து மிக அதிக வட்டி விகிதத்தில் கடன் பெற்றிருக்கின்றனர்.

விதவைகள் தங்களுக்கான வாழ்வாதார உரிமைகளைத் தேடிப் பெறுவது பெரும் சவாலாகவே உள்ளது. கணக்கெடுப்பில் பங்கேற்ற விதவைகளில் 38.6 சதவீதம் பேர் மட்டுமே விதவைகள் ஓய்வூதியத் திட்டத்தின் கீழ் பயன் பெறுவதற்கான ஆவணத்தை வைத்திருக்கின்றார்கள். விதவைகள் இத் திட்டத்தின கீழ் பயனடைவதைத் தடுக்கின்ற காரணிகள் லஞ்சம் மற்றும் விதவைகள் குறித்தான பாகுபாட்டுக் கண்ணோட்டம் என்று கூறுகின்றனர்.

கணவரின் இழப்பு விதவைகளின் வாழ்க்கையில் அழுத்தமான வாழ்வியல் மாற்றத்தினை ஏற்படுத்துகிறது. அன்றாட வாழ்வில் அவர்கள் சந்திக்க நேரிடும் சமூகப் புறக்கணிப்பு, தனிமை, மன உளைச்சல், கடன் சுமை, பாதுகாப்பின்மை ஆகியவை அவர்களைப் பெருளாதார மற்றும் உளவியல் சிக்கல்களுக்கு இட்டுச் செல்கின்றன.

இச்சூழலில், தமிழக அரசு விதவைப் பெண்களுக்கென தனிவாரியம் அமைத்து அவர்களது மேம்பாட்டிற்கு வழிவகை செய்து வருவது பாராட்டுக்குரியது. அம் முயற்சியினை வரவேற்பதோடு கீழ்கண்ட பரிந்துரைகளை தமிழக அரசுக்கு இந்த ஆய்வு முன் வைக்கின்றது. விதவைகளது சமூக, அரசியல், பொருளாதார உரிமைகளையும் மற்றும் சமத்துவம், வாழ்வாதாரம், வழிபாடு தொடர் பான உரிமைகளையும் உத்திரவாதப்படுத்திட வேண்டும்.கணவனது இறப்பினைத் தொடர்ந்து நடத்தப்படும் சமூகக் கலாச்சாரச் சடங்குகள் நிறுத்தப்பட வேண்டும் மற்றும் தடை செய்யப்பட வேண்டும்" என்றனர்.

பேட்டியின்போது நாகப்பட்டினம் கலங்கரை அமைப்பு இயக்குநர் குழந்தை, வழக்கறிஞர் ராஜன், சந்தானம் ஆகியோர் உடனிருந்தனர்.

# இறந்து போன நில உரிமையாளருக்கு எந்த வாரிசும் இல்லாததால் வரி கட்ட முடியாமலும் மின் இணைப்பு பெற முடியாமல் தவிக்கும் ஏழைக் குடும்பம்!


## மின் இணைப்பு கிடைக்க உதவிட திருவையாறு வட்டாட்சியருக்கு கோரிக்கை!




தஞ்சை மாவட்டம் திருவையாறு அடைக்கலம் காத்த அம்மன் நகரைச் சேர்ந்தவர் மஞ்சுளா. கணவனை இழந்து கஷ்டப்பட்டு சிறுக சிறுக சேமித்து அதன் மூலம் 2007—ல் இடம் வாங்கினார். இடத்தை பதிவு செய்வதற்கான கட்டணத் தொகை இல்லாமல் கஷ்டப்பட்டு வந்தார். பிறகு ஒரு வழியாக பதிவுக் கட்டணத்திற்கான தொகையை ஏற்பாடு செய்துவிட்டு பதிவு செய்யப்போகும் சமயத்தில் இடத்தை விற்ற தனலட்சுமி என்பவர் இறந்து விட்டார். இதனால் பதிவு செய்ய முடியாமலும், அந்த இடத்தில் கட்டிய வீட்டிற்கு மின் இணைப்பு பெற முடியாமலும் போராடி வருகிறார்.

இது குறித்த செய்தி முதல்வர், மாவட்ட ஆட்சியர், வட்டாட்சியர் மற்றும் சம்பந்தப் பட்ட உயர் அதிகாரிகளின் கவனத்திற்கு கொண்டு செல்லும் வகையில் செய்தி வெளியிடப்பட்டு அனுப்பி வைக்கப்பட்டது. இந்நிலையில் கிராம கணக்கில் தாக்கலாகி யுள்ள நபரின் வாரிசுகளிடமிருந்து கிரயம் ஆவணம் செய்து பட்டா மாற்றம் செய்தபின் மின் இணைப்பு பெற்றுக் கொள்ளலாம் என திருவையாறு வட்டாட்சியர் தெரிவித்துள்ளார்.

இடத்தை விற்றவருக்கு எந்த வாரிசும் இல்லாத நிலையில் எப்படி கிரயம் ஆவணம் செய்வது என்கிற சிக்கல் அக்குடும்பம் தத்தளித்து வருகிறது. இடத்தை மஞ்சுளாவிற்கு விற்ற தனலட்சுமி என்பவரின் கணவர் இறந்து விட்டார். தனலட்சுமியும் இறந்து விட்டார். இவர்களுக்கு வாரிசும் கிடையாது. தனக்கு எந்த வாரிசுமே இல்லை எனவும் தனது கணவருக்கு தான்தான் ஒரே வாரிசு எனவும் தனலட்சுமி அவர்கள் குறிப்பிட்டு கையெழுத்திட்டு பதிவு செய்துள்ளார்.



இப்பவும் எனதுகணவர் காலம் சென்ற ராமலிங்கம் குடும்பத்தில் 07.06.1984-ம்தேதியில்ஒருபாகப்பிரிவினைப்பத்திரம் செய்துக்கொள்ளப்பட்டு அது திருவையாறு சார்பதிவகத்தில் 1 புத்தகம் 1253 தொகுதி 101 முதல் 109 வரைப் பக்கங்களில் 1984 -ம் வருடத்திய 712 -ம் எண்ணாகப்பதிவாகி அதுமுதல்அவர் அனுபவித்து வந்து அவர்காலமானபிறகு அவரது ஒரேவாரிசாகிய எனக்கு கிடைத்துஅதுமுதல் சொந்தமும் அனுபவமும் உள்ள இதனடியிற்கண்ட விபரப் படிக்குள்ள சொத்தை என்னால் நேரில் இருந்து பரிபாலனம் செய்ய இயலாமல் நான் அடிக்கடி வெளியூர் செல்ல வேண்டியிருப்பதால் இதனடியிற்கண்ட சொத்தை பரிபாலனம் செய்ய தங்களை எனது பொது அதிகார முகவராக இதன் மூலம் நியமனம் செய்கிறேன்.

தற்போது மஞ்சுளா அவர்களின் மகள் திருமணம் ஜுலை 7—ல் நடைபெறவுள்ளது. வீட்டில் சுபகாரி யத்தை வைத்துக் கொண்டு மின்சாரம் இல்லாமல் தவித்து வருவது மிகவும் வேதனைக்குரியது எனவும், எனவே வட்டாட்சியர் அவர்கள் தாயுள்ளத் தோடு கருணை கூர்ந்து எனக்கு தற்காலிக மின் இணைப்பாவது கிடைத்திட பரிந்துரை செய்து உதவிட வேண்டும் எனவும் மஞ்சுளா வேண்டுகோள் விடுத்துள்ளார்.

# கள்ளச்சாராயம் அருந்தி உயிர் பிழைத்தவர்களின் கடைசி நிமிடங்கள்

கள்ளக்குறிச்சியில் மெத்தனால் கலந்த கள்ளச்சாராயம் குடித்ததால் உடல் நலம் பாதிக்கப்பட்ட 219 பேர் மருத் துவமனைகளில் அனுமதிக்கப்பட்டனர். அவர்களில் இதுவரை 59 பேர் உயிரிழந் துள்ளனர். கள்ளக்குறிச்சி, சேலம், விழுப் புரம் மற்றும் புதுச்சேரி மருத்துவமனை களில் 156 பேர் சிகிச்சை பெற்று வரு கின்றனர். இவர்களில், 5 பேர் மருத்துவர் களின் தீவிர சிகிச்சையால் உயிர் பிழைத்து, மீண்டு வந்துள்ளனர். அவர்கள் தங்களின் கடைசி நிமிடங்களைப் பற்றி கூறுகையில்,

**'தினமும் குடிக்கும் பழக்கம் உண்டு'**

கள்ளச்சாராயம் குடித்து சிகிச்சைக் குப் பின் உயிர் பிழைத்து மீண்ட முருகன் கூறுகையில்,

"எனக்கு தினமும் குடிக்கும் பழக்கம் உண்டு. தினமும் குறைந்தது நான்கு முதல் ஆறு பாக்கெட் சாராயம் குடிப்பேன். அது போலத்தான் அன்றும் சென்று நான்கு பாக்கெட் வாங்கிக் குடித்தேன். கூடுதலாக இரண்டு பாக்கெட் வாங்கி எனது பாக் கெட்டில் வைத்துக்கொண்டு வீட்டிற்கு வந்து விட்டேன். வீட்டிற்கு வந்தபோது சற்று உடல் தடுமாறி கீழே விழுந்தேன்.

என்னை எனது மகன் வீட்டிற்குள் தூக்கி வந்து படுக்க வைத்தார். எனக்கு எப் பொழுதும் போல் அல்லாமல் ஒரு வித்தி யாசமான நிலை இருப்பதை உணர்ந்தேன் என்ற போதும் என்னால் எதுவும் செய்ய முடியவில்லை. இட்லியும், சப்பாத்தியும் சாப்பிட்டுவிட்டு தூங்கி விட்டேன். அடுத்த நாள் காலை பத்து மணிக்கு தான் எழுந் தேன். நான் மூட்டை தூக்கி பிழைப்பு நடத் துபவன்" என்று கூறிய முருகன் தொட ர்ந்து பேசினார்.

"காலை எழுந்தவுடன் எனக்கு வாந்தி வந்தது. என்னை எனது மகனும், மகளும் உடனடியாகக் கள்ளக்குறிச்சி அரசு மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றனர். அங்கு டாக்டர்கள் உடனடியாக என் னைப் பரிசோதனை செய்து பாண்டிச்சேரி ஜிப்மர் மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர்" என்றார்.

அங்கு மருத்துவர்கள் மிக வேகமாகச் செயல்பட்டுத் தன்னை அவசர சிகிச்சைப் பிரிவில் சேர்த்து டயாலிசிஸ் மேற்கொண் டனர் என்கிறார் முருகன்.

**'இந்தக் கஷ்டத்தை மறக்க மாட்டேன்'**

"நான் உயிர்பிழைத்ததற்கு காரணம் மருத்துவர்கள் தான். நான் உயிர் பிழைப் பேன் என்று நினைத்துக் கூட பார்க்க வில்லை. மயக்க நிலையில் தான் இருந் தேன். இறந்து விடுவேனோ என்று மீண்டும் மீண்டும் பயந்தேன். குமட்டல் வந்து கொண்டே இருந்தது. ஆனால் மருத்துவர் கள் என்னைக் காப்பாற்றினார்கள். 20 வருடமாகத் தொடர்ந்து நான் சாராயம் குடித்து வருகின்றேன். மருத்துவமனையில் 5 நாட்களாக நான் பட்ட கஷ்டத்தை ஒருபோதும் மறக்க மாட்டேன்" என்கிறார்.

"மருத்துவமனையில் இருந்த ஒவ் வொரு நாளும் எனக்கு ஒரு வருடத்தை கடப்பது போன்ற உணர்வு இருந்தது. குடிப்பது தப்பு தான். ஆனால் அதற்குப் பழகிவிட்டேன். காலையில் எழுந்தாலே குடிக்க வேண்டும் என்ற எண்ணம் வரு கிறது. அதனால்தான் தொடர்ந்து குடித் தேன். இனிமேல் நிச்சயமாகக் குடிக்க மாட்டேன்," என்கிறார் முருகன்.

**'சிறு வயதிலேயே ஏற்பட்ட பழக்கம்'**

குடிக்கும் பழக்கம் தனக்குச் சிறு வயதில் ஏற்பட்டது எனக் கூறும் சத்யா, நீண்ட போராட்டத்திற்குப் பிறகு உயிர் பிழைத்து வந்துள்ளார்.

"ஒருநாள் என் அப்பாவின் நண்பர் ஒருவர் வீட்டிற்கு வந்தார். இருவரும் சாராயம் குடித்தனர். அதில் அவர்கள் சிறிது மீதி வைத்துவிட்டு வெளியே சென் றனர். அன்று நான் முதன் முதலாக அதைக் குடித்தேன். அது தொடர் கதையாக மாறிப்போனது. எப்பொழுதெல்லாம் வாய்ப்பு கிடைக்கின்றதோ அப்பொழு தெல்லாம் குடித்தேன். அடிக்கடி குடிக்கும் பழக்கம் உருவானது. பின்னர் இரண்டு குழந்தைகள் பிறந்தவுடன் நான் குடிப்பழக் கத்தை ஓரளவு நிறுத்தினேன். அவ்வப்போது மட்டுமே குடித்தேன்" என்கிறார்.

சம்பவம் நடந்த அன்று, சாராயம் குடித்தவுடன் தனக்கு வாந்தி வந்ததாகவும், உடல்நிலை மோசமானதாகவும் கூறும் சத்யா, தன்னுடன் சேர்ந்து குடித்தவர்களில் ஒருவர் இறந்து விட்டார் என்ற செய்தி தனக்கு அதிர்ச்சியாக இருந்ததாகச் சொல் கிறார்.

"உடனடியாக நான் ஆஸ்பத்திரிக்குச் சென்றேன். அங்கு என்னை பரிசோதனை செய்து சிகிச்சை அளித்தனர்," என்கிறார் சத்யா.

தன்னை பாண்டிச்சேரி ஜிப்மர் மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அனுப்பி வைத்த போது, தான் மீண்டும் உயிர் பிழைப்போமா, எனது குழந்தைகளை பார்ப்போமா என மிகவும் பயந்ததாகவும் கூறுகிறார் சத்யா.

"என்ன அழுது, என்ன பிரயோஜனம் குடிக்காமல் இருந்திருந்தால் இந்த நிலை வந்திருக்காது அல்லவா என்றெல்லாம் நினைத்தேன். நான் பாண்டிச்சேரி செல் லும் பொழுது, மீண்டும் உயிருடன் வருவது சந்தேகம் என்று தான் நினைத்தேன். ஏனென்றால் அன்று என்னுடன் குடித்தவர் கள் பெரும்பாலோர் இறந்து விட்டனர். நான் பிழைத்தது பாக்கியம் தான். எனது குழந்தைகளுக்காக இனி நான் குடிக்கவே மாட்டேன்" என்று கூறினார்.

**'தயவு செய்து இனி யாரும் சாராயம் குடிக்காதீர்கள்'**

சிகிச்சை பெற்று வீடு திரும்பிய கள் ளக்குறிச்சி, கருணாபுரம் மேல் தெருவில் வசித்து வரும் பரமசிவம் கூறுகையில்,

"கடந்த 18—ஆம் தேதி இரவு 8 மணிக்கு இரண்டு பாக்கெட் சாராயம் வாங்கி குடித்தேன். அதைக் குடிக்கும் போது எனக்கு வித்தியாசமாகத் தோன்றி யது. அதை அலட்சியப்படுத்திக் குடித்து விட்டேன். காலையில் எழுந்தவுடன் மயக்கமாக, சோம்பலாக இருந்தது. அதைத் தெளிய வைப்பதற்காக மீண்டும் இரண்டு பாக்கெட் சாராயத்தை குடித்தேன். குடித்து விட்டு வெளியே வந்தபோது சாராயம் குடித்து இரண்டு பேர் இறந்து விட்டதாக எனது மனைவி மற்றும் மகன் கூறினார் கள்" என்கிறார்.

எனக்குத் தலை சுற்றியது, மயங்கி விழுந்தேன். உடனடியாக எனது மகன் என்னை கள்ளக்குறிச்சி அரசு மருத்துவ மனைக்குத் தூக்கிச் சென்றார். அங்கிருந்து பாண்டிச்சேரி ஜிப்மர் மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டேன். அங்கு சேர்த் தவுடன் எனக்கு மருத்துவர்கள் தீவிரமாக சிகிச்சை அளித்தனர். ஆனாலும் என் உடல்நிலை தேறவில்லை, கண் பார்வை மங்கியது" என்று கூறியவர், கண்ணீர் விட்டு அழத் தொடங்கினார்.

பின்னர் தன்னை ஆசுவாசப்படுத்திக் கொண்டு மீண்டும் பேசத் தொடங்கியவர், "எனது அருகில் இருந்த மகன் என்னைப் பார்த்து கேட்ட கேள்விகள் நெஞ்சில் முள்ளாகத் தைத்தன. 'நீ ஏன் சாராயம் குடித்தாய்? இது தேவையா' என்றான். எனக்கு அசிங்கமாக இருந்தது," என்கிறார்.

"எனது நண்பர்கள் 'உன் அப்பா கள் ளச்சாராயம் குடிப்பவரா?' என்று ஏளன மாக பேசியது செருப்பால் அடித்தது போல் இருந்தது. இது தேவையா? என்று அழுதான். எனது குடும்பத்தாருக்கு மிகப் பெரிய மனக்கஷ்டத்தை தந்துள்ளேன் என்று வேதனைப்பட்டேன். எனது மகன் அழுததை என்னால் மறக்க முடியாது," என்று கூறினார்.

"இறந்துபோக வேண்டிய நான் உயிர் பிழைத்திருக்கிறேன். ஆகவே, இனி வரக்கூடிய காலங்களில் இளைஞர்களுக் கும் சரி, என்னை போன்ற வயதினருக்கும் சரி யாரும் சாராயம் குடிக்க வேண்டாம்," என்று வேண்டுகோள் விடுத்தார் பரமசிவம்.

**'கணவரின் இறுதிச் சடங்கில் கலந்து கொள்ள முடியவில்லை'**

சிகிச்சை பெற்று வீடு திரும்பிய கருணாபுரம், ஜோகியர் தெருவில் வசித்து வரும் சாரதா கூறுகையில்,

"எனது கணவர் முருகனின் சாவுக்குக் கூட என்னால் வர முடியவில்லை. எனது நிலை யாருக்கும் வரக்கூடாது.

எனது கணவர் முருகன் தினமும் குடிப்பார். எனக்கு அந்தப் பழக்கமில்லை. அன்று கூலி வேலைக்குச் சென்று வந்த போது எனது கணவர் தண்ணீர் கேட்டார். அப்பொழுது சொம்பில் தண்ணீர் கொடுத்துவிட்டு அமர்ந்தேன். அருகில் டம்ளரில் தண்ணீர் போல ஏதோ இருந்தது" என்றார்.

"வேலைக்குச் சென்று வந்து களைப் பாக இருந்ததால் அதை எடுத்துக் குடித் தேன். அது சாராயம் என்று எனக்கு தெரி யாது. குடித்த சிறிது நேரத்தில் எனது கண வர் பார்த்து எடுத்தார். உடனடியாக ஆஸ் பத்திரிக்கு அழைத்துச் சென்றோம். அங்கு சென்றவுடன் எனக்கும் வாந்தி வந்தது. இருவரும் சிகிச்சைக்காக அனுமதிக்கப் பட்டோம்" என்று கூறினார்.

தனது கணவர் உடல்நிலை மோச மானதால் முதலில் அவரை பாண்டிச் சேரிக்கு ஆம்புலன்ஸில் அழைத்துச் சென்ற தாகவும், பின்னர் தன்னையும் மருத்து வர்கள் வேறொரு ஆம்புலன்ஸ் மூலமாக அங்கு அனுப்பி வைத்ததாகவும் கூறுகிறார் சாரதா.

"ஆனால் வழியிலேயே எனது கணவர் இறந்து விட்டதாகக் கூறினார்கள். எனக்கு அழுகையாக வந்தது, ஆனால் என்ன செய்ய முடியும். மருத்துவமனையில் என் னை விடவில்லை. என் நிலைமை யாருக் கும் வரக்கூடாது. எனது கணவர் இறுதிச் சடங்கில் கூட மனைவியான நான் கலந்து கொள்ள முடியவில்லை. இதுதான் வாழ்க் கையா?" என்று அழத் தொடங்கினார்.

"கடைசியாக எனது கணவரின் முகத்தைக் கூடப் பார்க்க முடிய வில்லை. என்னைப் போல் இப்பகுதியில் நிறைய பெண் கள் விதவைகளாக மாறி விட்டனர். இதற்கெல்லாம் காரணமானவர்களைத் தண்டிக்க வேண்டும். கரு ணாபுரம் பகுதி யில் கள்ளச்சாராயம் முற்றிலு மாக ஒழிக் கப்பட வேண் டும்" என கண்ணீருடன் கூறுகிறார் சாரதா.



முருகன்







சாரதா

# திருடனாய்ப் பார்த்து திருந்தா விட்டால் திருட்டை ஒழிக்க முடியாது

## கள்ளச்சாராயத்தால் பாதிக்கப்பட்ட மக்கள் கருத்து!



கள்ளக்குறிச்சி கருணாபுரத்தில் மெத்த னால் கலந்த சாராயத்தைக் குடித்து 59 பேர் இறந்துள்ள நிலையில், கடந்த ஆண்டு விழுப்புரம் மாவட்டம் மரக்கா ணத்தில், இதேபோன்று விஷச் சாராயம் குடித்து 14 பேர் இறந்த எக்கியார்குப்பம் மீனவ கிராமத்தின் தற்போதைய நிலை யைப் பார்க்கலாம்.

"கடந்த ஆண்டு எங்கள் கிராமத்தில் மட்டும் 14 பேர் கள்ளச்சாராயத்திற்கு இறந் தது தமிழ்நாட்டிற்கே ஒரு எச்சரிக்கை மணி யாக இருக்கும் என நினைத்தோம். ஆனால், தற்போது இதைவிட அதிக மரணங்கள் கருணாபுரத்தில் நிகழ்ந்திருப்பதைப் பார்த்து நெஞ்சமே பதறுகிறது. கருணாபுரம் பகுதி மக்களின் வலிகளை எங்களால் உணர முடிகிறது" என வருந்துகின்றனர் எக்கியார் குப்பம் கிராம மக்கள்.

கள்ளக்குறிச்சியில், மெத்தனால் கலந்த கள்ளச்சாராயம் குடித்ததில் இதுவரை 59 பேர் பலியாகியுள்ளனர். நூற்றுக்கணக் கானவர்கள் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இந்தச் சம்பவம் தமிழ்நாட்டையே உலுக்கிய நிலையில் சமீபத்திய ஆண்டுக ளில் கள்ளச்சாராயத்திற்கு அதிக உயிர்க ளைப் பறிகொடுத்த பகுதியாக கள்ளக் குறிச்சியின் கருணாபுரத்திற்கு அடுத்த இடத்தில் உள்ளது எக்கியார்குப்பம். 2023— ஆம் ஆண்டு மே மாதம் விழுப்புரம் மாவட் டம் மரக்காணம் மற்றும் செங்கல்பட்டில், கள்ளச்சாராயம் குடித்து 22 பேர் இறந் தனர். இதில் 14 பேர் எக்கியார்குப்பம் கிரா மத்தைச் சேர்ந்தவர்கள்.

கருணாபுரத்திற்கும், எக்கியார்குப்பத் திற்கும் சில ஒற்றுமைகள் உள்ளன. இரண் டுமே சமூக மற்றும் பொருளாதாரத்தில் பின்தங்கிய பகுதிகள். கருணாபுரத்தில் இறந்தவர்களும் மூட்டை தூக்கும் கூலி வேலைகளைச் செய்துவந்த பட்டியல் இன மக்கள். எக்கியார்குப்பத்தில் இறந்தவர்க ளில் பெரும்பாலோனோர் மீன்பிடித் தொழிலாளர்கள்.

கள்ளக்குறிச்சி கள்ளச்சாராய மரணங் களுக்குப் பிறகு, எக்கியார்குப்பத்தில் என்ன சூழ்நிலை உள்ளது? கள்ளச்சாரா யத்திற்குக் குடும்பத் தலைவர்களை இழந்த குடும்பங்களின் தற்போதைய நிலை என்ன, என்பதை பார்க்கலாம்.

கிட்டத்தட்ட 400 குடும்பங்கள் வசிக் கும் கடற்கரையை ஒட்டிய அமைதியான மீனவ கிராமமான எக்கியார்குப்பம், கள் ளச்சாராய மரணங்களுக்கு பிறகே அதிகம் அறியப்பட்டது. தற்போது, கள்ளக்குறிச்சி மரணங்களுக்குப் பிறகு எக்கியார்குப்பத் தில் மீண்டும் சோக அலை வீசுகிறது.

### குடும்பத் தலைவர்களை இழந்த குடும்பங்கள்

"எங்கள் கிராமத் தில் இறந்தவர்களில் பெரும்பாலோனோர் குடும்பத் தலைவர் கள். அவர்களை நம்பித் தான் அவர்களது குடும்பமே இருந்தது. ஓராண்டில் அந்தக் குடும்பங்களின் சூழ்நிலையே மாறியுள் ளது" என்றனர் மீனவர்கள்.

"அன்றைய தினத்தை யாராலும் மறக்க முடியாது. கிராமத்தின் மையப் பகுதியான, இங்கிருந்து ஒன்றரை கிலோ மீட்டர் தொலைவில் ஒரு மரத்திற்கு அடியில்தான் சாராயம் விற்றார்கள். வழக்கமாக ஒரு பாக் கெட் 50 ரூபாய்க்கு விற்பார்கள் ஆனால், அன்றையே தினம் வெறும் 30 ரூபாய்க்கு விற்றிருக்கிறார்கள். காலை 9 மணிக்குத் தொழிலை முடித்துக்கொண்டு கடலிலி ருந்து வந்தவர்கள், வழக்கம்போல நேரடி யாகச் சாராயம் வாங்கச் சென்றிருக்கிறார் கள். வழக்கத்தை விடக் குறைவான விலைக் குக் கிடைக்கவே, சிலர் அதிக பாக்கெட் களை வாங்கியிருக்கிறார்கள்" என்றார் சண்முகம் என்ற மீனவர்.

"எங்கள் கிராமத்தில் சாராயம் விற்றது குறித்து போலிசாருக்கு நன்றாகவே தெரியும். ஆனால், அவர்கள் கண்டுகொள்ளவே இல்லை. 14 உயிர்போன பிறகே போலிசார் எங்கள் கிராமத்திற்கு வந்தார்கள். இப்போது எங்கள் கிராமத்தில் சாராயம் விற்கப்பட வில்லை என்றாலும், மரக்காணத்தில் தாரா ளமாகச் சாராயம் கிடைக்கிறது" என்கிறார் கள்ளச்சாராயத்திற்குத் தனது தந்தை விஜயனை இழந்த 27 வயதான நேதாஜி.

கல்லூரி படிப்பை முடித்துவிட்டு போட்டித்தேர்வுக்கு தயாரிக் கொண்டிருக் கிறார் நேதாஜி. இவரும் இவரது தம்பியும் தந்தையும் இறந்தபிறகு தாயின் ஒற்றை வருமானத்தை நம்பியே உள்ளனர். இவரது தாயார் வீடு வீடாகச் சென்று மீன் விற்று வருகிறார்.



"என் அப்பா சாராயம் குடிப்பார், ஆனால் எங்களை நன்றாகவே பார்த்துக் கொண்டார். கூலிக்குக் கடலில் மீன் பிடிக் கும் வேலையைச் செய்து வந்த அவருக்கு ஒரு நாளைக்கு 400 ரூபாய் சம்பளம். இதில் 200 ரூபாயை அவருக்கேன எடுத்துக் கொள்வார். 400 ரூபாய் சம்பாதித்தாலும், 1,000 ரூபாய் சம்பாதித்தாலும் அவருடைய லிமிட் 200 ரூபாய்தான். மீதிச் சம்பளத்தை அம்மாவிடம் கொடுத்துவிடுவார்," என்கி றார் நேதாஜி.

தான் அரசு வேலைக்குச் செல்ல வேண்டும் என தனது தந்தை விரும்பிய தாகவும், அதற்கான முயற்சியில் தற்போது இருப்பதாகவும் நேதாஜி கூறுகிறார்.

"எங்கள் கிராமத்தைச் சேர்ந்த சிலர் தங்களது தந்தை இறந்தபிறகு, அவர்கள் பார்த்த தொழிலான மீன்பிடி தொழிலில் இறங்கிவிடுவார்கள். ஆனால், நான் அரசு வேலைக்குச் சென்று அப்பாவின் கனவை நனவாக்க வேண்டும் என உறுதியாக உள்ளேன்" என்கிறார்.

"எப்போது கடலுக்குச் சென்றுவிட்டு வந்தாலும் அப்பா சாராயம் குடித்துவிட்டு தான் வருவார். அன்றும் அப்படிதான் குடித்துவிட்டு வந்தார். அன்று நிறையக் குடித்துவிட்டதால் போதை அதிகமாக இருப்பதாக நினைத்திருந்தார். ஆனால் சிறிது நேரத்தில் அவருக்கு வலி ஏற்படத் துவங்கியது" என்கிறார் நேதாஜி.

"சாராயம் குடிக்க வேண்டாம் எனப் பல முறை அப்பாவிடம் நானும் அம்மாவும் கூறியிருக்கிறோம். 'கடலில் எப்போது என்ன ஆகும் என்றே தெரியாது. வேலை கடுமையான உள்ளது. எனக்கு நிலையான மாத சம்பளம் என எதுவும் இல்லை. இது போன்ற ஒரு பொருளாதார சூழலில் உடல் அசதியைப் போக்க வேறு வழியில்லை' என அப்பா கூறுவார்," என்கிறார் நேதாஜி.

### அவமரியாதை, உளவியல் சிக்கல்

கள்ளச்சாராயம் குடித்து இறந்தவர் என்ற பெயரை அப்பா பெற்றதால் உள வியல் ரீதியாகப் பல சவால்களை எதிர் கொள்வதாகக் கூறுகிறார் நேதாஜி.


"எனக்குத் திருமணம் செய்ய வேண் டும் என அம்மா நினைக்கிறார். ஆனால், சாராயம் குடித்து இறந்தவர் மகனுக்கு பெண் தர முடியாது எனச் சிலர் கூறி விட்டனர். எனக்கு எவ்வித குடிப் பழக்க மும் இல்லை. ஆனால், எனது அப்பா மற் றும் எங்களது சமூக சூழலைப் பார்த்து நானும் சாராயம் குடிப்பேன் எனப் பலர் கருதுகின்றனர். இந்த அவப்பெயரிலிருந்து மீள்வது மிகப்பெரிய சவாலாக எங்கள் குடும்பத்திற்கு உள்ளது" என்கிறார்.

"அதுமட்டுமல்ல, 'கள்ளச்சாராயம் குடித்துத்தானே இறந்துபோனார்கள் அவர் களின் குடும்பத்திற்கு எதற்கு 10 லட்சம் ரூபாய்?' என்ற ஏளனப்பேச்சையும் எதிர் கொள்ள வேண்டியிருக்கிறது. என் அப்பா மீது எவ்வளவு தவறு இருக்கிறதோ அதை விட அதிக தவறு அரசு மேல் உள்ளது. கொரோனா பொது முடக்கக் காலத்தில் மக்கள் மது இல்லாமல் இருந்தார்களே. அது போல கள்ளச்சாராயத்திற்கு எதிராகவும் அரசு அதிரடியாக நடவடிக்கை எடுக்க வேண்டியதுதானே" என்கிறார் நேதாஜி.

மேலும் அவர் கூறுகையில், "எங்கள் கிராமத்தைச் சேர்ந்த சிலரே இன்னும் சாராயம் குடித்துக்கொண்டுதான் இருக் கின்றனர். எங்கேயோ சென்று வாங்கி வந்து குடிக்கிறார்கள். இதை ஒழிக்கவே முடியாது போல என்ற விரக்தி நிலைக்கு நாங்கள் சென்றுவிட்டோம்" என வருந்தினார்.

### 'படிப்பை நிறுத்திய பிள்ளைகள்'





வாழ்க்கையே தலைகீழாக மாறிவிட்டது," எனக் கூறுகிறார்.

அஞ்சனாவுக்கு 2 மகன்கள், ஒரு மகள். கணவர் இறந்தபிறகு, 2 மகன்களும் பள்ளிப் படிப்பை நிறுத்திவிட்டு தற்போது கடலுக்கு செல்கின்றனர் என்கிறார் அஞ்சனா.

"அரசு சார்பில் 10 லட்சம் ரூபாய் நிதி கொடுத்தார்கள். இறுதிச் சடங்கிற்குச் செல வான பணம் போக, கொஞ்சம் பணம் மூலம் கடனை அடைத்தோம். மீதியுள்ள பணத்தை 3 குழந்தைகளுக்கான சேமிப்பாக வைத்திருக்கிறேன். குடும்பத்தை நடத்த நான் மீன் வெட்டும் வேலைக்குச் சென் றேன். நான் கஷ்டப்பட வேண்டாம் எனக் கூறிய எனது மகன்கள், இப்போது கடலுக் குச் சென்று வருகின்றனர். என் கணவர் தனிஆளாகக் குடும்பத்தை நடத்தினார். இப்போது அவருக்குப் பதில் 2 பேர் உழைக்கின்றனர். எப்படியாவது இங்கு மாடி வீடு கட்டிவிட வேண்டும் என்பது என் விருப்பம்" என்கிறார் அவர்.

"இப்போது கள்ளக்குறிச்சியிலும் என் னைப்போலப் பல பெண்கள் கணவரை இழந்திருப்பதைத் தெரிந்துகொண்டேன். கள்ளச்சாராயத்திற்கு பெண்கள் விதவை களாகும் அவலத்திற்கு எங்கள் கிராமம் கடைசியாக இருக்க வேண்டும் என நினைத்தோம். ஆனால், இது தொடர்வதை பார்த்தால் இன்னும் கோபம்தான் அதிகமாகிறது," என்கிறார். அஞ்சனா.

### மிரட்டும் சாராய வியாபாரிகள்

மரணம் மட்டுமல்ல, அதன்பிறகும் பல இன்னல்களைச் சாராயம் குடித்த வர்கள் சந்தித்ததாகக் கூறுகிறார் தனது தந்தையை இழந்த ஆறுமுகம்.

"என் அப்பா உட்பட 14 பேர் இறந்தது மட்டுமல்ல, 2 நபர்களுக்குக் கண் பார்வை பறிபோனது. 10—க்கும் மேற்பட்டோர் உடல் உபாதைகளால் தொழிலுக்குச் செல்லமுடியாமல் வீட்டிலேயே உள்ளனர். அவர்களுக்குப் பதில் அவர்களது மனை வியோ அல்லது குழந்தைகளோ வேலைக் குச் செல்ல வேண்டிய சூழ்நிலை உள்ளது. சி.பி.சி.ஐ.டி விசாரணை இன்னும் நடந்து வருகிறது. ஆனால், இன்னும் ஒரு முடிவு கிடைக்கவில்லை. இங்குள்ள சில சாராய வியாபாரிகள், சிறைக்குச் செல்வது, பின் னர் மீண்டும் விடுதலையாவது என்பது தொடர்கதையாக உள்ளது. அரசு ஒரு கடும் நடவடிக்கை எடுக்காதவரையில், ஒரு தீர்வு கிடைக்காது" என்கிறார் ஆறுமுகம்.

கடந்த விழுப்புரம் எஸ்.பி அலுவலகத் தில் நடந்த சி.பி.சி.ஐ.டி விசாரணைக்கு நேதாஜி மற்றும் ஆறுமுகம் ஆகியோர் சென்று வந்துள்ளனர்.

"எங்கள் கிராமத்தில் சாராயம் விற்று கைதானவர்களின் ஆதரவாளர்கள், விழுப் புரத்தில் நடந்த சி.பி.சி.ஐ.டி விசாரணைக்கு வந்திருந்தனர். 'ஏதோ தவறு நடந்துவிட்டது. இனி எதுவும் செய்ய முடியாது. சாராயம் விற்றது யார் என்பது தெரியாது' என நீதி மன்றத்தில் கூறுமாறு எனக்கு அழுத்தம் கொடுத்தார்கள். விசாரணை நியாயமாக நடந்து, அனைத்து குற்றவாளிகளுக்குத் தண்டனை கிடைக்குமென நம்புகிறோம்," என்கிறார் நேதாஜி.

### காவல்துறையின் பதில் என்ன?

மரக்காணத்தில் இன்னும் கள்ளச்சாரா யம் விற்கப்படுவதாக இப்பகுதிகள் மக்க ளின் குற்றச்சாட்டு குறித்து விழுப்புரம் காவல் கண்காணிப்பாளர் சஷாங்க் சாயி கூறுகையில்,

"மரக்காணம் கள்ளச்சாராய மரணத் திற்குப் பிறகு அந்தப் பகுதியில் போலீஸ் பாதுகாப்பு மற்றும் வாகனத்தணிக்கையை அதிகரித்திருக்கிறோம். கடந்த ஓராண்டாக மரக்காணத்தில் சாராயம் விற்கப்பட வில்லை. சாராய வியாபாரிகளின் தொடர் புடையவர்கள் சாட்சிகளை மிரட்டியிருந் தால் கடும் நடவடிக்கை எடுக்கப்படும்" என்றார்.



# கள்ளச்சாராயத்தை ஒழிக்கவே முடியாதா? (ஒரு சிறப்பு பார்வை!)

**கள்ளச்சாராய விற்பனை தொடர்வது எங்கே?**

திருவண்ணாமலை, திருப்பத்தூர் மாவட்டத்தின் ஜவ்வாது மலை, கள்ளக்குறிச்சியின் கல்வராயன் மலை ஆகிய பகுதிகளில் கள்ளச் சாராயம் உற்பத்தி செய்யப்பட்டதாக பலமுறை நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளன.

கள்ளக்குறிச்சி சம்பவத்திற்கு பிறகு தமிழ்நாட்டின் பல்வேறு மாவட்டங்களிலும் கள்ளச் சாராயம் விற்பனை தொடர்பாக ரெய்டு நடத்தப்பட்டு, கன்னியாகுமரி உள்பட சில இடங்களில் கைது நடவடிக்கையும் எடுக்கப்பட்டுள்ளது.

இதுதவிர விழுப்புரம், கடலூர், அரி யலூர், செங்கல்பட்டு ஆகிய மாவட்டங்களில் அடிக்கடி கள்ளச்சாராயம் தொடர்பான ரெய்டு நடத்தப்பட்டும் கைதும் நடக்கிறது.

யார் அதிக போதை தரும் சாராயத்தை உற்பத்தி செய்வது என்ற போட்டியில், மெத்தனால் கலந்து விற்கும் நிலை வட தமிழ்நாட்டில் சில இடங்களில் காணப்படுவதாக செய்தியாளர்கள் கூறுகின்றனர்.

கள்ளக்குறிச்சி, திருவண்ணாமலை, திருப்பத்தூர், விழுப்புரம் ஆகிய மாவட்டங்களில் வசிக்கும் அதிகளவிலான மக்கள் விவசாய தொழிலாளர்களாகவும், தினக்கூலிகளாகவும் உள்ளனர். விவசாய கூலி வேலை, சுமை தூக்கும் வேலை, பெயிண்டிங் பிளம்பிங், கொத்தனார், சித்தாள், காவலாளி போன்ற வேலைகளை இவர்கள் நம்பியுள்ளனர்.

டாஸ்மாக் கடைகளில் அதிக விலை க்கு மதுபானம் வாங்க முடியாத பொரு ளாதாரத்தில் பின் தங்கிய நிலையில் உள்ள இவர்கள், இது போன்ற கள்ளச்சாராயத்தை நோக்கிச் செல்வதாக கள்ளக்குறிச்சி சம்பவத்தால் பாதிக்கப்பட்ட குடும்பங்களை சேர்ந்தவர்கள் தெரிவித்தனர். இங்கே பாக்கெட் சாராயம் 50 ரூபாய்க்கு விற்கப்பட்டு வந்திருப்பதாக மரக்காணம் பகுதியை சேர்ந்த பத்திரிகையாளர் முருகன் கூறுகிறார்.

உடல் உழைப்பு மிகுந்த வேலைகளைச் செய்யும் தொழிலாளர்கள் உடல் வலிக்காக தினமும் மது அருந்த விரும்புகின்றனர். தினசரி 300—400 ரூபாய் சம்பாதிக்கும் ஒரு தொழிலாளி, டாஸ்மாக் கடைக்குச் சென்று 120 முதல் 150 ரூபாய் செலவழித்து மது பானம் அருந்த விரும்புவதில்லை. அதற்குப் பதிலாக பாதி விலையில் சாராயம் குடித்து விடலாம் என நினைக்கிறார்கள்" என்கிறார் முருகன்.

**கள்ளச்சாராய வணிகம் ஏன் நீடிக்கிறது?**

தமிழ்நாட்டில் 5,329 டாஸ்மாக் மது பான கடைகள் இருந்தபோதிலும், கள்ளச் சாராய விற்பனை இன்னும் தொடர பல காரணங்கள் உள்ளன.

ஒன்று இதன் விலை. ஒரு பாக்கெட் சாராயத்தின் விலை 50 ரூபாய் மட்டுமே என்பதால், பொருளாதாரத்தில் பின்தங்கியவர்களின் விருப்பமாக இது உள்ளது. மற்றொன்று, அதிகாலை முதல் நள்ளிரவு வரை எப்போதுமே கிடைக்கும் என்பதால், கிராமப்புறங்களில் உள்ளவர்கள் கள்ளச் சாராயத்தை நோக்கி செல்வதாக முருகன் விவரித்தார்.

கள்ளக்குறிச்சியில் 24 மணிநேரமும் இந்த கள்ளச்சாராயம் கிடைப்பதாகவும், அதுவும் ஆட்டோ, இருசக்கர வாகனம் என பலவற்றிலும் வந்து வீட்டிலேயே கொடுத்துவிட்டு போகும் வழக்கம் உள்ளதாகவும் அப்பகுதி பெண்கள் கூறினர்.

**காவல்துறை நடவடிக்கை என்ன?**

கள்ளச்சாராயத்தை தடுப்பது தமிழ் நாடு மதுவிலக்கு கலால் பிரிவு காவல் துறையின் பொறுப்பாகும். கடந்த 2021 முதல் கள்ளச் சாராயத்துக்கு எதிரான நடவடிக்கையில் 4 லட்சத்து 60 ஆயிரம் பேர் கைது செய்யப்பட்டுள்ளதாகவும், அதில் 565 பேர் குண்டர் தடுப்பு சட்டத்தில் கைது செய்யட்டிருப்பதாகவும் தமிழக முதல்வர் ஸ்டாலின் சட்டமன்றத்தில் தெரிவித்தார்.

கடந்த வருடம் நடந்த மரக்காணம் கள்ளச் சாராய மரணத்தில், சி.பி.சி.ஐ.டி காவல்துறையினர் 21 பேரை கைது செய்த துடன், அதில் 8 பேரை குண்டர் தடுப்பு சட்டத்தில் கைது செய்து சிறையில் அடைத்துள்ளது.

அண்மையில் கல்வராயன் மலையில் இயங்கி வந்த கள்ளச்சாராய ஆலை ஒன்றை கடலூர் மாவட்ட கலால் காவல் துறையினர் கண்டுபிடித்து நடவடிக்கை எடுத்தனர்.

கல்வராயன் மலை மற்றும் ஜவ்வாது மலையில், சாராய ஊறல்கள் கண்டுபிடிக்கப்பட்டு அழிக்கப்படுவது குறித்து அவ்வப்போது செய்திகள் வெளியாகும். அதேபோல, மாவட்ட எல்லைகளிலும், ஆந்திரா—தமிழ்நாடு, புதுச்சேரி—தமிழ்நாடு மாநில எல்லைகளிலும் மதுவிலக்கு கலால் துறையினர் வாகனத்தணிக்கையில் ஈடுபட்டு வந்தனர். இத்தகைய நடவடிக்கைகளால் கள்ளச்சாராயத்தை முற்றிலும் ஒழிக்க முடியவில்லை என்பதை கள்ளக் குறிச்சி சம்பவம் சுட்டிக்காட்டுகிறது.

சாராய விற்பனை குறித்து காவல் நிலையத்தில் புகார் கொடுக்க சென்றாலும், போலீசார் பணம் வாங்கிக்கொண்டு தங்களையே திட்டுவதாக குற்றம் சாட்டுகின்றனர் கள்ளக்குறிச்சியின் கருணாபுரம் மக்கள்.

தமிழக காவல்துறை சார்பில் போலீஸ் மற்றும் பொதுமக்கள் இடையே நல்லுறவை ஏற்படுத்த 'கிராம காவலர்கள்' திட்டம் கடந்த 2021—ம் ஆண்டு தொடங்கப்பட்டது. இந்த திட்டத்தின் கீழ், பொதுமக்கள் தங்களது பகுதியில் நடக்கும் பிரச்னைகள், சந்தேக நபர்களின் நடமாட்டம், கள்ளச் சாராயம் விற்பனை குறித்து புகார் அளிக்க ஊக்கம் அளிக்கப்பட்டது. கள்ளச்சாராயத்தின் ஆபத்துகள் குறித்தும் பொது மக்களுக்கு விழிப்புணர்வு அளிக்கப்பட்டது. ஆனால், இந்த திட்டம் அரசு எதிர்பார்த்த அளவில் மக்களிடையே சென்று சேரவில்லை என்பதையே கள்ளக்குறிச்சி சம்பவம் எடுத்துரைப்பதாக அமைந்துள்ளது.

**அரசு சொல்வது என்ன?**

கள்ளச்சாராய மரணத்தை தொடர்ந்து பத்திரிகையாளர்களுக்குப் பேட்டி அளித்த அமைச்சர் எ.வ.வேலு, ''இந்த சம்பவத்தை நாங்கள் நியாயப்படுத்த விரும்பவில்லை. இந்த சம்பவம் தவிர்க்கப்பட வேண்டிய ஒன்று. அதில் எவ்வித மாற்றுக்கருத்தும் இல்லை. விஷ சாராய விவகாரத்தில் கூடுதல் கவனம் செலுத்தப்பட்டுள்ளது. இந்த விவகாரத்தில் ஆட்சியர், காவல்துறை அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது,'' என்றார்.

கள்ளக்குறிச்சியில் மரணங்கள் அதிக ரிக்கத் தொடங்கியவுடன், அம்மாவட்ட ஆட்சியர் ஷ்ரவன்குமார் பணியிட மாற்றம் செய்யப்பட்டார், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் சமய்சிங் மீனா பணியிடை நீக்கம் செய்யப்பட்டு புதிய எஸ்.பி.யாக ரஜத் சதுர்வேதி நியமிக்கப்பட்டார்.

"இது காவல்துறையின் கவனக்குறை வால் நடந்திருப்பது கண்டறியப்பட்டு, கள்ளக்குறிச்சி எஸ்.பி. உள்ளிட்ட 10 காவல்துறை அதிகாரிகள் தற்காலிக பணியிடை நீக்கம் செய்யப்பட்டுள்ளனர். இதில் தொடர்புடைய அனைவரும் கைது செய்யப்பட்டு, தண்டனை கிடைக்க வழிவகை செய்யப்படும். யாருக்கும் அரசு பரிவு காட்டாது," என்று தமிழக அரசு அறிக்கை வெளியிட்டது.

கள்ளச்சாராய உயிரிழப்புகள் பற்றிய வழக்கு சி.பி.சி.ஐ.டி—க்கு மாற்றப்பட்டுள்ளதாகவும் இந்த சம்பவம் குறித்தான விரிவான அறிக்கை அரசுக்கு சமர்ப்பிக்கப்படும் என்றும் ள்ளக்குறிச்சியின் புதிய மாவட்ட ஆட்சியர் பிரசாந்த் தெரிவித்தார்.

அத்துடன் கள்ளச்சாராயம் குடித்து உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு தலா ரூ.10 லட்சமும், மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு உள்ளவர்களுக்கு தலா ரூ.50 ஆயிரமும் வழங்க தமிழக அரசு உத்தரவிட்டது.

மேலும் இது தொடர்பாக விசாரிக்க ஓய்வுபெற்ற நீதிபதி கோகுல்தாஸ் தலைமையில் ஒருநபர் விசாரணை ஆணையம் தமிழக அரசால் அமைக்கப்பட்டு விசாரணை நடைபெற்று வருகிறது.

**எதிர்க்கட்சிகள் கூறுவது என்ன?**

கள்ளக்குறிச்சியில் கள்ளச்சாராயம் விற்பனை செய்யப்பட்டதற்கு திமுக முக்கிய நிர்வாகிகளே காரணம் என்று அப்பகுதி மக்கள் தெரிவித்திருப்பதாக, இந்த மரணங்களுக்குத் தார்மீக பொறுப்பேற்று தமிழக முதல்வர் பதவி விலக வேண்டும் எனவும் எதிர்க்கட்சி தலைவர் எடப்பாடி பழனிசாமி கூறியுள்ளார்.

''தமிழகம் முழுவதும் ஆறாக ஓடும் கள்ளச் சாராய விற்பனையைத் தடுக்கத் திறனில்லாமல் தொடர்ந்து உயிர்கள் இழப் பிற்கு மதுவிலக்குத் துறை அமைச்சர் முழு பொறுப்பேற்க வேண்டும். கள்ளச்சாராய விற்பனையைத் தடுக்காத, அமைச்சர் முத்துசாமியை முதல்வர் ஸ்டாலின் உடனடியாகப் பதவி நீக்கம் செய்ய வேண்டும்'' என பாஜக தமிழக தலைவர் அண்ணாமலை கூறியுள்ளார்.

''கள்ளச்சாராய சாவுகள் குறித்த அனைத்து உண்மைகளும் வெளிக் கொண்டு வரப்பட வேண்டும். கள்ளச் சாராய வணிகர்களுக்கு காவலாக இருப்பவர்கள் எவ்வளவு உயர்பதவியில் இருந்தாலும் அவர்கள் சட்டத்தின் முன் நிறுத்தப்பட்டு தண்டிக்கப்பட வேண்டும். எனவே, கள்ளக்குறிச்சி கள்ளச்சாராய சாவுகள் குறித்த விசாரணையை சி.பி.ஐ.யிடம் தமிழக அரசு ஒப்படைக்க வேண்டும்.'' என பாமக நிறுவனர் ராமதாஸ் அறிக்கை வெளியிட் டுள்ளார்.

**விழிப்புணர்வு அவசியமா?**

மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தி னால் மட்டுமே கள்ளச்சாராய ஆபத்திலி ருந்து அவர்களைக் காப்பாற்ற முடியும் என திருப்பத்தூர் மலைக் கிராமங்களில் கள்ளச் சாராயத்தின் ஆபத்துகள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தி வரும் சமூக ஆர்வலர் ராதாகிருஷ்ணன் கூறுகிறார்.

''தற்போது அதிகம் செயல்படுத்தப் படாமல் உள்ள கிராம காவல் திட்டத்தின் கீழ், ஊராட்சி மன்றத் தலைவர்கள், கிராம நிர்வாக அலுவலர்கள், தலையாரிகள் ஆகி யோரை காவல்துறை தொடர்பு கொண்டு, அந்தந்த கிராமத்தில் முறைகேடாகச் சாராயம் விற்பது குறித்தும், அதில் ஈடு படுவோர் குறித்தும் தகவல் அளிக்க அவர்களை வலியுறுத்த வேண்டும். மாவட்டம் முழுவதும் கிராம அளவில் காவல்துறை அதிகாரிகள் சாராயத்தை உட்கொள்வதால் ஏற்படும் தீமைகள் குறித்து மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும்'' என்கிறார் அவர்.

---

# உடற்பயிற்சி துறையில் பெண்களுக்கு அதிகரிக்கும் வேலை வாய்ப்பு!

உடற்பயிற்சி குறித்த விழிப்புணர்வு மக்களிடையே அதிக அளவில் வளர்ந்து வருகிறது. உடல்நலம் சீராக மருத்துவர் கள் உடற்பயிற்சி செய்ய பரிந்துரைக் கின்றனர். குறிப்பாக பெண்களிடம் உடற்பயிற்சி குறித்து பெருமளவில் விழிப்புணர்வு ஏற் பட்டுள்ளது. இருப்பினும் பெண்கள் தங்கள் குறிப்பிட்ட உடற்பயிற்சி தேவைகளை கற்றுக் கொடுக்க, செயல்படுத்த பெண் உடற் பயிற்சியாளர்களை நாடுகிறார்கள். ஆனால் இந்த துறையில் பெண் பயிற்சியாளர்கள் அதிகம் இல்லை என்பதே உண்மை. இந்த வெற்றிடத்தை சரிசெய்ய பெண் உடற் பயிற்சியாளர்கள் அதிகம் தேவை என்பதே தற்போதைய நிலை.

ஒரு பெண், உடற்பயிற்சியாளராக பணிபுரிவது மற்றவர்களுக்கு கற்று கொடுக்கும் வாய்ப்பு மட்டுமல்ல, தனிப்பட்ட மற் றும் நிதி நிறைவுக்கான வழிகாட்டியாகவும் திகழ்கிறது.

**ஏன் பெண் பயிற்சியாளர்களை தேர்வு செய்கிறார்கள்?**

உடற்பயிற்சி மேற்கொள்ள விரும்பும் பல பெண்கள், ஒரு பெண் உடற்பயிற்சி யாளரிடம் கற்றுகொள்ளவது மிகவும் ஊக்க மாகவும், பாதுகாப்பாகவும் உணர்கிறார்கள். சௌகரியம், தொடர்புத்தன்மை மற்றும் அவர்களின் குறிப்பிட்ட உடற்பயிற்சி தேவைகள் மற்றும் சவால்கள் பற்றிய ஆழமான புரிதல் ஆகியவற்றின் காரணமாக பெண்கள் பெரும்பாலும் பெண் உடற் பயிற்சியாளர்களை நாடுகிறார்கள்

பெண் உடற்பயிற்சியாளர்கள், பெண்களின் தனித்துவமான சவால்கள் மற்றும் குறிக்கோள்களைப் புரிந்து கொண்டு, ஆதரவான, ஊக்கமளிக்கும் சூழலை வளர்க்கிறார்கள். இது துறையில் பெண் நிபுணத் துவத்திற்கான வலுவான தேவையை உருவாக்குகிறது.

**துறை வாய்ப்புகள்**

பெண் உடற்பயிற்சியாளருக்கான வாய்ப்புகள் பரந்த அளவில் உள்ளன. சிறந்த பயிற்சியகத்தில் உடற்பயிற்சி கல்வி குறித்து கற்றுக் கொண்டு, "அங்கீகரிக்கப்பட்ட உடற் பயிற்சியாளர்" சான்று பெற வேண்டும். இதன் மூலம் தனிநபர் உடற்பயிற்சியாளர் மற்றும் உடற்பயிற்சி மையத்தில் குழு பயிற்சியாளராக பணியாற்றலாம்.

தற்போது அனைத்து மருத்துவமனைகளிலும், அரசு தொடங்கியுள்ள உடற்பயிற்சி கூடங்கள், தனியார் கூடங்களில் பணியாற்றலாம்.



அத்துடன் பொது மருத்துவர்கள், இயல்முறை மருத்துவர்கள் மற்றும் உணவியல் நிபுணர்கள் உடன் இணைந்து பணியாற்றலாம் உடற்ப யிற்சி துறைகளின் மற்ற துறை பயிற்சிகளான யோகா மற்றும் பிளாத்திஸ் களிலும் பயிற்றுவிப்பாளராகவும் திகழலாம்.

**தொழில்முனைவோர்**

உடற்பயிற்சி துறை, ஆர்வம் மற்றும் புதுமைகளால் வளர்ந்து வருகின்றது. சரியான பயிற்சி தகுதிகளுடன், பெண்கள் சொந்த உடற்பயிற்சி ஸ்டுடியோ, ஆன்லைன் பயிற்சி தளம் அமைக்கலாம் அல்லது சொந்த உடற்பயிற்சி திட்டத்தை உருவாக்க லாம்.

தனிப்பட்ட முறையில் தேவைகேற்ப உடற்பயிற்சி அளிப்பது இந்த துறையின் சிறப்பாகும். குறிப்பாக வீட்டிற்கே சென்று வயதானவர்களுக்கு கற்றுக் கொடுப்பது, பெண்களுக்கு உடல் சார்ந்த பிரச்சனைகளுக்கு பயிற்சி அளிப்பது. உடல் பருமன் சார்ந்த பயிற்சி அளிப்பது, உடல் எடை குறைக்க, சிறப்பு குழந்தைகளுக்கான பயிற்சிகள் அளிப்பது போன்ற பணிகளில் ஈடுபடலாம். மேலும் பிரபலங்களுக்கு சிறப்பு பயி ற்சி அளிப்பது மற்றும் நேர கணக்கில் பயிற்சி அளித்து வருமானம் பெறுவதும் சாத்தியமே.

அத்துடன் தற்காப்பு கலைகளுடன் உடற்பயிற்சி கற்று கொடுப்பதால் அதிக வருமானம் பெறலாம். இந்த துறையில் பெண்கள், அவர்களே முதலாளியாக இருப்பதற்கான சுதந்திரத்தை வழங்குவதுடன் அவர்களே தங்கள் வாழ்க்கையை வடிவமைக்க உதவுகிறது.

**சுய பலன்கள்**

இந்த துறையில் மட்டும் தான், ஒருவர் சிறந்து விளங்க தங்ககளை கட்டாயம் ஆரோக்கியமாக வைத்திருக்க வேண்டும். மேலும் ஆரோக்கியமான வாழ்க்கை முறைக்கு மாற்றமடைய செய்யும், உடற் பயிற்சி நுட்பங்கள் மற்றும் மன அழுத்த மேலாண்மை பற்றிய அறிவைப் பெறுவார் கள், இவை அனைத்தும் பெண்கள் தங்கள் சொந்த நல்வாழ்வுக்கு பங்களிக்கின்றன.

**வருமானம்**

இத்துறையில் சேர குறைந்தது பத்தாம் வகுப்பு படித்திருக்க வேண்டும். அத்துடன் "அங்கீகரிக்கப்பட்ட உடற்பயிற்சியாளர்" சான்றிதழ் பெற்று நுழைவு நிலை உடற் பயிற்சியாளராக பணி சேர்ந்து சுமார் ரூ.20,000 முதல் 40,000 வரை ஆரம்ப சம்ப ளத்தை எதிர்பார்க்கலாம். பெண்கள் அனு பவத்தைப் பெறும்போது, வாடிக்கையாளர் களை உருவாக்கி, கூடுதல் சான்றிதழ்களைப் பெறுவர். மேலும் பெண்களின் வருமானம் கணிசமாக அதிகரிக்கிறது. அனுபவம் வாய்ந்த பயிற்சியாளர்கள் தங்கள் சேவை களுக்கான பிரீமியம் கட்டணங்களையும் எதிர்பார்க்கலாம்.


**வெளிநாட்டில் வாய்ப்புகள்**

தகுதி வாய்ந்த உடற்பயிற்சியாளர்களுக்கான தேவை எல்லா நாடுகளிலும் தேவைப்படுகிறது,. குறிப்பாக வளைகுடா நாடுகளில் வாய்ப்புகள் அதிகம் உள்ளது. சரியான சான்றிதழ்கள் மற்றும் மொழி திறன்களுடன், பெண்கள் வெளிநாட்டில் வாய்ப்புகளை எதிர்பார்க்கலாம். உடற் பயிற்சி வகுப்புகளை கற்பிப்பது அல்லது ஆன்லைன் பயிற்சியை வழங்குவது புதிய கலாச்சாரங்கள் மற்றும் அனுபவங்களுக்கு கதவுகளைத் திறக்கும்.

**மகளிர் மேம்பாடு**

ஒரு பெண் உடற்பயிற்சியாளர் பணி தேர்வு செய்வது என்பது உடற்பயிற்சி சார்ந்தது மட்டுமல்ல; அது பெண்கள், பொது வாழ்வில் முன்னேற்றத்திற்கு வாய்ப்பு மற்றும் மேன்மை அடைதல் எனலாம். அதுமட்டுமன்றி. மற்றவர்களின் முழு உடற்திறனை அடைய ஊக்குவிப்பதோடு, சாதனை மற் றும் தன்னம்பிக்கை உணர்வை வளர்ப் பார்கள்.

**– டாக்டர். லிஜி விஜய்.**



தற்போது
தமிழ் சொல்
மாத
இதழை
ஆன்லைனில்
படிக்க...
Scan and Read
www.tamilsoul.com

Published and Printed by Karthikeyan P and Printed at Chennai Offset Printers, 19/1, 21/2, Kitabathkhan Bhadur Street, Ellies Road, Chennai-600 002 and Published at 13/25, 2nd Street, Sundharapuram, Puliyanthope, Chennai-600 012. Cell : 94444 01485 Editor: SRIDHAR